நகர சபை, யாழ்ப்பாணம்

விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு

Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 தை 02 வெள்ளிக்கிழமை (15.01.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 27

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாந் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சிமெந்து
RAMCO

## டப்ளின் விசாரணைகளை அரசாங்கம் நிராகரித்தது

(கொழும்பு)

மனித உரிமை மீறல்கள் தொடர்பில் அயர்லாந்தின் டப்ளின் நகரில் நடைபெறும் விசாரணைகளை இலங்கை அரசாங்கம் முற்று முழுதாக நிராகரித்துள்ளது.

நிலையான இலங்கை மக்கள் நீதிமன்றம் என்ற அமைப்பினால் நடத்தப்படும் விசாரணைகளினால் நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த முடியாது என அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

மாறாக இந்த விசாரணைகளின் மூலம் நாட்டின் ஸ்திரத் (16 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் அரசியல் கைதிகளின் போராட்டம் இடைநிறுத்தம்

(கொழும்பு)

கொழும்பு மகசின் சிறைச்சாலை மற்றும் அநுராதபுரம், யாழ்ப்பாணம், மட்டக்களப்புப் போன்ற சிறைச்சாலைகளிலும் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டு வந்த தமிழ் அரசியல் கைதிகள் நூற்றுக் கணக்கானோர் தமது போராட்டத்தை நேற்றுப் பிற்பகல் முதல் தற்காலிகமாக விலக்கிக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமது விடுதலையைக் கோரி இவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை கடந்த 8 நாள்களாக மேற் (16 ஆம் பக்கம் பார்க்க)

## ★ கனரக ஆயுதங்களை பயன்படுத்துவது இல்லை ★

# ஜனாதிபதி மகிந்தவின் அறிவித்தலே

# தமிழக காங்கிரஸ் வெல்ல உதவியது

### அவரின் செயலர் டெய்லி மிரருக்குத் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளுக்கும் படையினருக்குமிடையில் இறுதி யுத்தம் இடம்பெற்றபோது கனரக ஆயுதங்களைப் பயன் படுத்துவதில்லை என்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அறிவிப்பே தமிழகத்தில் காங்கிரஸ் கட்சி வெல்ல உதவியது என ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தெரிவித்தார். (16 ஆம் பக்கம் பார்க்க)

## வன்முறைச் சம்பவங்களுக்கு அரசே பொறுப்புக் கூற வேண்டும்

### ஆசிய மனித உரிமைகள் அமைப்பு கண்டனம்

(கொழும்பு)

இலங்கையில் மோசமடைந்துள்ள தேர்தல் வன்முறைகளை நிறுத்துவதற்கு அனைத்துலக சமூகம் உடனடியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இந்த வன்முறைகளுக்கு ஜனாதிபதி, பொலிஸ் மா அதிபர் ஆகியோர் பொறுப்பு என ஆசிய மனித உரிமைகள் அமைப்புத் தெரிவித்துள்ளது.

அது தனது (16 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி வேட்பாளர் விலகிக் கொண்டார்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிடும் வேட்பாளர் பத்தரமுல்ல சீலரத்ன தேரர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதிலிருந்து விலகி ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்கப் போகின்றேன். ஜனாதிபதியுடன் சேர்ந்து நேற்று முன்தினம் நடத்திய கலந்துரையாடலையடுத்தே தான் இந்த முடிபினை மேற்கொண்டதாகவும் (16 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேயின் முதன்மை வெளிநாட்டவராக தமிழர்

(ஒஸ்லோ)

நோர்வேயின் பத்து முதன்மை வெளிநாட்டவர்களில் ஒருவராக தமிழரான பேராசிரியர் வேலாயுதபிள்ளை தயாளன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நோர்வே சமூகத்தில் சமூக கலாசார மற்றும் தொழில்சார் விடயங்களில் தாக்கத்தை ஏற்படுத்திய 10 முதன்மையான வெளிநாட்டவர்களை வருடந் (16 ஆம் பக்கம் பார்க்க)

## கண்ணிவெடிகள் அகற்றப்பட்டதும் பொதுமக்கள் மீளக்குடியேறலாம்

### ★ பாதுகாப்புத் தரப்பினர் அறிவிப்பு ★

(யாழ்ப்பாணம்)

கண்ணி வெடிகள் மற்றும் மிதி வெடிகள் என்பன அகற்றப்பட்டதும் உயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் மக்கள் மீள்குடியமர்த்தப் படுவார்கள் என யாழ்.பிராந்திய பாதுகாப்பு அதிகாரி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார்.

அதுவரையும் மீளக்குடியேறும் பிரதேசங்களில் அமைந்துள்ள கோவில்கள், தேவாலயங்களுக்குப் பூசகர்கள் மற்றும் பொதுமக்கள் சென்று தடையின்றி வழிபடுவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

இது தொடர்பாகப் பாதுகாப்புத் தரப்பினர் வெளியிட்ட செய்திக் (16 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி மகிந்தவின் செயலரின் கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது

### காங்கிரஸ் கட்சி அறிவிப்பு

(புதுடில்லி)

இந்தியாவில் ஆளும் காங்கிரஸ் கட்சி மீண்டும் ஒரு முறை ஆட்சியில் அமர்வதற்கு இலங்கை ஜனாதிபதி ஒத்துழைப்பு வழங்கியுள்ளதாக அவரது செயலாளர் லலித் வீரதுங்க கூறியுள்ள கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என காங்கிரஸ் கட்சியின் அகில இந்திய செய்தித் தொடர்பாளர் ஞான தேசிகன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் (16 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே...




இன்றைய வலம்புரியுடன் அழகிய தெய்வீக வர்ணக் கலண்டர் இணைக்கப் பட்டுள்ளது. கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள்.

## இலங்கை ஜனாதிபதி உதவினாரா? அவதானிக்கப்படும் என்கிறது பா.ஜ.க.

(புதுடில்லி)

இந்தியாவின் காங்கிரஸ் கூட்டணி ஆட்சிப் பீடம் ஏறுவதற்கு இலங்கையின் ஆளும் கட்சி ஒத்துழைப்பு வழங்கியதாக வெளியான செய்திகள் குறித்து அவதானிக்கப்படும் என பாரதீய ஜனதாக் கட்சி அறிவித்துள்ளது.

குறிப்பாக தமிழகத்தில் காங்கிரஸ் கூட்டணி வெற்றியீட்டுவதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆளும் கட்சி ஒத்துழைப்பு வழங்கியதாக ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க செவ்வி அளித்திருந்தார்.

காங்கிரஸ் கூட்டணி தேர்தலில் வெற்றியீட்டுவதனை உறுதிப்படுத்தும் நோக்கில் இறுதிக் கட்ட யுத் (16 ஆம் பக்கம் பார்க்க)

## ஜாதிக ஹெல உறுமயக் கட்சியில் சிலர் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவு

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் எதிர்க் கட்சிகளின் பொது ஜனாதிபதி வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின்போது ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவளிப்பதாக ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் சில பௌத்த பிக்குகள் நேற்று உறுதியளித்துள்ளனர்.

ஜாதிக ஹெல உறுமயக் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர், குருநாகல மாவட்ட தலைவர், (16 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்





யாழ். கொட்டடிப் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து கைப்பற்றப்பட்ட கசிப்பு குகையில் இருந்து மீட்கப்பட்ட கசிப்பு உற்பத்தி உபகரணங்களையும், நிலத்திற்கடியில் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கசிப்பு பரலை மீட்புக் குழுவினர் தோண்டி எடுப்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-ரம்ஷன்)

## உயர் தொழில் நுட்பநிறுவன மாணவர்களுக்கு

யாழ்ப்பாண உயர் தொழில் நுட்பவியல் நிறுவனத்தில் சகல கற்கை நெறிகளையும் 1993 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை கற்று இதுவரை இறுதி பரீட்சைக்கு தோற்றாத, சித்தியடைய தவறிய மாணவர்களும் மற்றும் நிறுவனத்தில் கற்கை நெறியினை தொடர்ந்து பரீட்சைக்கு தோற்ற முடியாது தற்போது புதிதாக விடுவிக்கப்பட்ட நலன்புரி நிலையங்களில் இருந்து வருகை தந்து பரீட்சைக்கு தோற்ற வேண்டிய மாணவர்கள் அனைவரும் எதிர்வரும் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு நிறுவனத்திற்கு சமுகமளித்து தமது விபரங்களை பதிவு செய்து கொள்ளுமாறு யாழ்ப்பாண உயர் தொழில் நுட்பவியல் நிறுவன பழைய மாணவர் சங்க செயலாளர் வி.தயாபரன் கேட்டுக் கொண்டுள்ளார். இப் பதிவு தமக்கு வழங்கப்படும் இறுதி சந்தர்ப்பம் என்பதனை கவனத்தில் கொள்ளவும். ( சு)

# யாழ்ப்பாண நகரில் ஒரு வழிப்பாதைகள் சீராக நடைமுறைப்படுத்தப்படுவதில்லை

## பொதுமக்கள் விசனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரில் உள்ள ஒரு வழிப்பாதைகளான கஸ்தூரியார் வீதி மற்றும் காங்கேசன்துறை வீதியூடான போக்குவரத்துக்கள் ஒழுங்கான முறையில் நடைமுறைப்படுத்தப்படாததால் போக்குவரத்து நெருக்கடி ஏற்படுவதாக பொதுமக்கள் விசனம் தெரிவித்தனர்.

காங்கேசன்துறை வீதியூடாக யாழ்.நகருக்குள் செல்வதற்கும், கஸ்தூரியார் வீதியூடாக நகரிலிருந்து வெளியேறுவதற்கும் என ஒரு வழிப்பாதைகள் அறிவிக்கப்பட்டன.

எனினும் அவை தற்போது சீராக நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. காலை நேரங்களில் போக்குவரத்துப் பொலிஸார் கடமையில் ஈடுபட்டு இந் நடைமுறைகளை பின்பற்றாதோர் மீது நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

எனினும் மாலை வேளைகளில் இந்நடைமுறை பின்பற்றப்படுவதில்லை என சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

நகருக்குள் செல்லும் காங்கேசன்துறை வீதியில் மாலை வேளைகளில் வாகனங்கள் தரித்து நிற்கின்றன.

அதேவேளை நகரிலிருந்து வெளியேறும் சில வாகனங்களும் இப்பாதையூடாகவே பயணத்தை மேற்கொள்கின்றன. இதனால் போக்குவரத்து நெருக்கடி ஏற்பட்டு விபத்துக்கள் ஏற்படும் சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன.

ஒரு வழிப்பாதை என்ற நடைமுறை 24 மணி நேரமும் கடைப்பிடிப்பதற்கு ஏற்ற ஒழுங்குகளை உரிய தரப்பினர் மேற்கொள்ள வேண்டுமென பொதுமக்கள் கேட்டுள்ளனர். (சு)


சுதந்திர தேசத்தில்
சமத்துவமாய் வாழ..
ஜனநாயகம் நிலைக்க..
எதிர்காலம் செழிக்க..



யாழ்மக்கள் பட்டதுன்பம் பறக்கலாச்சு
தொட்டதெல்லாம் துலங்கும் காலம் தொடங்கலாச்சு!

வன்னிமக்கள் வாழ்வினிலே இருந்த இன்னல்
வளம்மிக்க செயற்பாட்டால் மறையலாச்சு!

எழுகதிரோன் திசையென்னும் கிழக்கு மண்ணில்
ஏற்றமிகு வாழ்வை மக்கள் ஏற்கலாச்சு!

மலையகத்துப் பசுமைமிகு மண்மீதெங்கும்
மலர்ந்துள்ள புது வாழ்வு தொடரலாச்சு!

தமிழ் பேசும் மக்கள் கூடத் தலைநகரில்
தலை நிமிர்ந்து வாழுந் தன்மை தன்னைப் பெற்றார்!

எங்கள் தெரிவு



மஹிந்த ராஜபக்ஷ

தமிழர்தம் வாழ்வில்
வீசட்டும் வசந்தம்


# முதற் கட்டமாக 99பேருக்கு மௌலவி ஆசிரியர் நியமனம்

## அடுத்த மாத முற்பகுதியில் நியமிப்பு

நாடுபூராகவும் உள்ள பாடசாலைகளில் நிலவும் மௌலவி ஆசிரியர் வெற்றிடங்களுக்கு 615பேரை புதிதாக நியமிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. முதற் கட்டமாக அடுத்த மாத முற்பகுதியில் 99பேருக்கு மௌவி ஆசிரியர் நியமனம் வழங்க உள்ளதாக கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் மொஹமட் தம்பி தெரிவித்தார்.

இவர்களுக்கான கடிதங்கள் கல்வி வலயங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதோடு நேர்முகப் பரீட்சையில் தெரிவான ஏனைய விண்ணப்பதாரிகளுக்கு இரண்டாம் கட்டத்தின் போது நியமனம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் காணப்படும் வெற்றிடங்களுக்கு ஏற்ப இவர்களை நியமிக்கப்பட உள்ளதாக கூறிய அவர், சிங்களமொழி மூலம் 11 பேருக்கான வெற்றிடம் காணப்படு வதாகக் கூறினார். ஆனால் இந்த வெற்றிடங்களை நிரப்பத் தகுதியானவர்கள் இல்லை எனவும் அறியவருகிறது.

மௌலவி ஆசிரியர் வெற்றிடங்களுக்குப் புதிதாக ஆசிரியர்களை நியமிப்பதற்காக 194விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டனர். அதிலே முதற்கட்டமாக 99பேர் தெரிவானதோடு ஏனையவர்கள் அடுத்த கட்டத்தின்போது மௌலவி ஆசிரியர்களாக நியமிக்கப்பட உள்ளதாகவும் அவர் கூறினார். (ச)

## டெங்கு நோய் விழிப்புணர்வுக் கருத்தரங்கு

மானிப்பாய் சத்திய சாயி சேவா நிலையம் நடத்தும் டெங்கு நோய் ஒழிப்பு விழிப்புணர்வுக் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு தென்மேற்கு பிரதேச சபை கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் வைத்திய கலாநிதி திருமதி திருமகள் சிவசங்கர் மற்றும் சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி டினேஸ் ஜெயக்குமார் ஆகியோர் கருத்துரைகளை வழங்கவுள்ளனர். அனைவரும் இந் நிகழ்வில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-3)

# விழிப்புக் குழுவினரால் நேற்று கசிப்புக் குகை கைப்பற்றப்பட்டது

(யாழ்ப்பாணம்)

கொட்டடிச் சந்தியில் வீடொன்றில் இருந்து கசிப்புக் குகை யாழ்.முஸ்லிம், கொட்டடி மற்றும் நாவாந்துறை விழிப்புக்குழுவால் நேற்று கைப்பற்றப்பட்டது.

நேற்றுக் காலை 9.30மணியளவில் கொட்டடிச் சந்தியில் வீடொன்றில் சோதனையிட்ட விழிப்புக் குழு கசிப்பு காய்ச்சிய நிலையில் 3பேரை பிடித் ததுடன் வீட்டினுள் புதைக்கப்பட்ட நிலையில் 3பரல் கோடா மற்றும் கசிப்பினை கைப்பற்றியுள்ளனர்.

இது தொடர்பாக யாழ்ப்பாண பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்ட வேளை சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் இச் சம்பவத்தில் ஈடுபட்ட இருவரை கைது செய்துள்ளதுடன் பொருட்களையும் கைப்பற்றிச் சென்றனர். (ச-7)


வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தைப்பொங்கல் திருநாள் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்

ராஜா மெகா ஸ்பெஷல், ராஜா ஸ்பெஷல் ஐஸ்கிறீம், நட்ஸ் ஐஸ்கிறீம், புறுட்சலட் ஐஸ்கிறீம், வனிலா ஐஸ்கிறீம், சொக்லட் ஐஸ்கிறீம் போன்ற ஐஸ்கிறீம் வகைகள் மற்றும் குளிர்பானங்கள், மட்டன் றோல், மெகா றோல், சமோசா, லட்டு, கேக், பால்கோவா போன்ற சிற்றுண்டி வகைகளையும் சிக்கன் புரியாணி, மட்டன் புரியாணி, கொத்து றொட்டி போன்றவற்றினை காலை, மதியம், இரவு ஆகிய மூன்று வேளையும் சகல உணவு வகைகளையும் நீங்கள் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய ஸ்தாபனம்

(C-4232)

ராஜா கிறீம் ஹவுஸ்



36, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்,
TP.No. 021-222 8437
கிளை:- ராஜா கிறீம் ஹவுஸ் &
ஹோட்டல், 46, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

# இன்று ஒரு தகவல்

## மனித உறவுகள்

ஒரு நண்பருடன் பேசிக்கொண்டிருந்தேன். மனித உறவுகள் பற்றி அவூர் சொல்லிக் கொண்டிருந்தார். அமெரிக்காவில் தந்தை – மகன் உறவு எப்படி இருக்கிறது என்பதை விளக்குவதற்கு அவர் ஒரு கதையைச் சொன்னார்.

ஓர் அப்பா... அவருக்கு பகல் முழுவதும் வேலை. ஓடியாடி உழைத்துவிட்டு களைத்துப்போய் இரவு பத்து மணிக்குப் பின் வீடு திரும்புகிறார். வீட்டு வாசலில் அவருடைய மகன் தூங்காமல் காத்துக் கொண்டிருக்கிறார்.

வீட்டுக்கு வந்த தந்தை வாசலிலேயே தடுத்து நிறுத்தி "அப்பா உங்களுக்கு எவ்வளவு சம்பளம்?" என்று கேட்கிறான்.

ஏற்கனவே அலுவலகப் பிரச்சினைகளால் அலுத்துப் போய்த் திரும்பும் அப்பாவுக்கு கோபம் வந்துவிட்டது.

"என்னடா... இப்படியெல்லாம் கேள் என்று உன் அம்மா உனக்குச் சொல்லிக் கொடுத்தாளா?" என்று சொல்லிக்கொண்டே உள்ளே போய் உடையை மாற்றி... குளித்துவிட்டு... மறுபடியும் உடை மாற்றும் சமயம் மீண்டும் மகன் முன்னே வந்து நிற்கிறான்.

"அப்பா உனக்கு எவ்வளவு சம்பளம்?" என்று கேட்கிறான். அப்பாவுக்கு எரிச்சல் அதிகமாயிற்று.

"மணிக்கு இருபது டொலர். போதுமா...?" என்றார்.

"அப்படியானால்... எனக்கு ஒரு பத்து டொலர் தரமுடியுமா?" என்கிறான்.

"இதற்குத்தான் என் சம்பளம் எவ்வளவு என்று கேட்டாயா? இரண்டாம் வகுப்புப் படிக்கிற உனக்கு எதற்கெடா பத்து டொலர்?" என்று கத்திவிட்டு தொலைக்காட்சிப் பெட்டியின் முன்னால் போய் உட்கார்ந்து ஏதோ நிகழ்ச்சியைப் பார்க்க ஆரம்பித்தார். சிறிது நேரம் கழித்து

மறுபடியும் மகன் வந்து நின்றான்.

"அப்பா... ப்ளீஸ்... எனக்குப் பத்து டொலர் தரமுடியுமா?"

மகனின் கண்கள் கலங்கியிருந்தன.

"என்னடா... உன் அம்மா மாதிரியே கண்ணீரைக் காட்டிக் காரியம் சாதிக்கலாம் என்று பார்க்கிறாயா? ஒரு சதம் கூடத்தர முடியாதுபோ" என்று விரட்டினார்.

மகன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே பேசாமல் போய்ப் படுத்துக் கொண்டான்.

சிறிது நேரம் கழித்து அப்பாவின் கோபம் மெல்லத் தனிந்தது.

"பிள்ளையிடம் கோபமாகக் கத்தியது தப்புத்தான்" என்று மனம் உறுத்தியது.எழுந்து படுக்கையறைக்குப் போனார்.

மகனைப் பார்த்தார்.

அவன் தலையணையைக் கட்டிக் கொண்டு அழுது கொண்டிருந்தான்.

அவனிடம் மெல்ல நெருங்கி இதமாகப் பேசினார்.

"எதற்கெடா உனக்குப் பத்து டொலர்? பள்ளிக்கூடத்தில் கேட்டார்களா?" என்றார்.

அதற்கு மகன் சொன்னான்.

"இல்லை டாடி! உங்களுக்கு ஒரு மணி நேர சம்பளம் இருபது டொலர் என்றல்லவா சொன்னீங்க. நீங்க எனக்குக் கைச் செலவுக்காகக் கொடுத்த பத்து டொலர் என்னிடம் தான் இருக்கிறது. இப்பொழுது நீங்கள் இன்னொரு பத்து டொலர் கொடுத்தால்... அதையும் சேர்த்து இருபது டொலராக உங்களுக்கு நான் கொடுக்கிறேன்.

அப்படிக் கொடுத்தால் என்னோடு ஒரு மணி நேரம் செலவழிப்பீர்களல்லவா... அதற்குத்தான் பத்து டொலர் கேட்டேன்! என்றான்.

அந்த அப்பாவின் கண் கலங்கியது.

ஆதரவோடு தனது மகனைக் கட்டிப் பிடித்தார்.

இதுதான் நண்பர் சொன்னகதை.

அமெரிக்கா மட்டுமல்ல... உலகம் முழுவதும் இன்று மனித உறவுகள் இப்படித்தான் மாறிக்கொண்டு வருகின்றன.

பெரியவர்கள் கூறும் அறிவுரை என்ன தெரியுமா?

"உங்கள் குழந்தைகளிடமிருந்து குழந்தைப் பருவத்தைப் பிரித்து விடாதீர்கள்" என்பதுதான்.

"இன்றைய குழந்தைகள் தங்கள் பிருந்தாவனத்தை இழந்து விடுகிறார்கள்" என்பது அவர்கள் கருத்து.

இந்த நிலைக்கு நாம் காரணமாக இருந்துவிடக் கூடாது. குழந்தைகளோடு விளையாடுவோம்! குடும்பத்தினரோடு உறவாடுவோம்!

இன்றைய உறவுமுறைக்கு இன்னொரு உதாரணம். ஒருத்தர் வந்தார். அவரது பக்கத்தில் ஒரு சின்னப் பையன் நின்றான்.

அவரை விசாரித்தேன். "யார் இந்த பையன்?"

"இவர் எனக்கு தூரத்து உறவு?"

"அப்படியானால்?"

"இவன்... எங்க அப்பாவுக்கு எட்டாவது பிள்ளை"

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

---

### JICA நிறுவன உதவியுடன்

# யாழ். மாவட்டத்திற்கான துரித மீள்கட்டுமான அபிவிருத்தி பணிகளும், திட்டமிடலும்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திற்கான மீள்கட்டுமான துரித அபிவிருத்தித் திட்டம் சம்பந்தமான கலந்துரையாடலொன்று நேற்று காலை 8.30 மணிக்கு மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர், கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஆகியோருடன் JICA நிறுவனப் பிரதிநிதிகளால் மேற்கொள்ளப்பட்டது.

இக்கலந்துரையாடலின் போது மேற்குறிப்பிட்ட துறைகளிலே சமூகமளித்த நிறுவனங்களினதும், மக்கள் பங்களிப்புடனும் அடையாளம் காணப்பட்ட திட்டங்களை அமுலாக்குவதென தீர்மானிக்கப்பட்டது.

மேலும் இரணைமடுவிலிருந்து யாழ். மாவட்டத்திற்குரிய குடிநீர் விநியோகத்திட்டம், யாழ். மாவட்டத்திலுள்ள மின் பாவனையின் 100% இலக்கை அடையும் திட்டம், வீதி அபிவிருத்தித் திட்டம், சுகாதாரம், வாழ்வாதாரம் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

தேச நிர்மாணம் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் வழிகாட்டலில் மேற்படி திட்டங்கள் அமுலாக்கப்படும்.

இதற்குரிய ஆரம்ப வேலைகள் எதிர்வரும் மார்ச் மாதத்தில் தொடங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றது.

யாழ். போதனா வைத்தியசாலையின் புதிய கட்டிடத் தொகுதி நிர்மாண வேலைகள் JICA நிறுவனத்தினால் முதன்முறையாக யாழ்ப்பாணத்தில் அமுலாக்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

"தை பிறந்தால் வழி பிறக்கும்" என்ற எம்மவர்களின் ஆழ்ந்த நம்பிக்கைக்கு அமைவாக தைப்பொங்கல் தினத்தில் மேற்படி முக்கிய கலந்துரையாடல் நிறைவேறியுள்ளது.

நல்ல சகுணமாக தென்படுவதுடன், எமது மாவட்ட மக்களினுடைய உடனடித் தேவைகளை அடையாளம் கண்டு அவர்களுக்குரிய வாழ்வாதாரங்களை அளிப்பதற்கும் இத்திட்டம் வழிவகுக்கும் என்ற நம்பிக்கையுடன் இவ்வருடத்தை எதிர்பார்ப்பதுடன், இத் திட்டத்திற்கான நிதி ஏற்பாட்டுக்கான ஒப்பந்தம் அடுத்த வாரம் கையொப்பம் இடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று யாழ். மாவட்டச் செயலகத்தினர் தெரிவித்துள்ளனர்.

இக்குழுவினர் மாவட்ட செயலருடன் நடாத்திய 5 ஆவது கூட்டம் இதுவாகும். (2-6)

---

## பிரதேச சபையின் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபை பிரிவிலுள்ள திருநெல்வேலி ஆடிய பாதம் வீதியில் இடநெருக்கடியினை தவிர்க்கும் பொருட்டு அவ்விடத்தில் துவிச்சக்கர வண்டிகளை நிறுத்தாது வாகன் தரிப்பிடத்தில் நிறுத்தி ஒத்துழைப்பு தருமாறு வேண்டப்படுகின்றார்கள்.

இதனை தவறும் பட்சத்தில் பிரதேச சபை சட்டங்களின் படி தாம் உரிய நடவடிக்கை எடுக்கவுள்ளதாக நல்லூர் பிரதேச சபையினர் தெரிவித்துள்ளனர். (6-30)

---




சிங்கர் நிறுவனத்தால் மந்திகை வைத்தியசாலைக்கு அண்மையில் தொலைக்காட்சிப் பெட்டி ஒன்று அன்பளிப்பு செய்யப்பட்டது. இந்நிகழ்வில் நிறுவனத்தின் மாவட்ட முகாமையாளர் வி. தயாளன், நெல்லியடி கிளை முகாமையாளர் கே. துஷ்யந்தன், சிரேஷ்ட பிராந்திய முகாமையாளர் எம். மகேசரட்ணம் ஆகியோருடன் வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தர் விக்னேஸ்வரமூர்த்தி மற்றும் உத்தியோகத்தர்கள் நிற்பதைப் படத்தில் காணலாம்.

---

## இராசி பலன்

15-01-2010
(தை 02 வெள்ளிக்கிழமை)
அமாவாசை பிற்பகல் 12.56 மணிவரை
உத்தராடம் முழுவதும்
இராகுகாலம் 11.04 - 12.34 மணிவரை
சுபநேரம் 6.34 - 8.04 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | நல்ல செய்தி, எடுத்த காரியம் கைகூடும், நோய் குணமடைதல், போசன சுகம். |
| இடபம் | ஆன்றோர் சந்திப்பு,தேவையற்ற அச்சம், அதிக பிரயாசை, பிரயாண நன்மை. |
| மிதுனம் | எதிர்பாராத அச்சம், போசன சுகம், முயற்சி தாமதம், தெய்வ சிந்தை. |
| கடகம் | அபூர்வ சந்திப்பு,நல்ல வரவேற்பு, தெய்வ தரிசனம், முயற்சி கைகூடும். |
| சிங்கம் | தேகநலன்,பணவருவாய்,தெய்வ தரிசனம், காரிய நன்மை. |
| கன்னி | கௌரவக்குறைவு,வேலைச்சுமை, தெய்வ சிந்தை, போசன சுகம். |
| துலாம் | கல்வியில் ஆர்வம்,அற்பர் உறவு, ஆரோக்கியக்குறைவு, நல்ல முயற்சி. |
| விருச்சிகம் | அந்நியர் சந்திப்பு, எதிர்பாராத நன்மை, வாகன சுகம், இனிய நிகழ்வு |
| தனுசு | அமைதிக்குறைவு, சுபகாரியச் செலவு,தெய்வ சிந்தை,உறவினர் சந்திப்பு. |
| மகரம் | புதிய பொருள் சேர்க்கை, சயன சுகம், உறவினர் வருகை, தெய்வ தரிசனம். |
| கும்பம் | பிதாசிந்தை, சுபகாரியச் செலவு, பிரயாணம், நண்பர்கள் சந்திப்பு. |
| மீனம் | பொருள் சேர்க்கை, உறவினர் வருகை, தெய்வ தரிசனம், நல்ல வரவேற்பு. |

வளவன்

---

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 220 | 140 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 220 | 240 | 200 |
| தக்காளி | 140 | 140 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 35 | 40 |
| கோவா | 70 | 80 | 80 |
| கரட் | 100 | 120 | 120 |
| பூசணி | 40 | 50 | 40 |
| புடோல் | 80 | 100 | 70 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 120 | 140 | 100 |
| பெரிய வெங்காயம் | 60 | 75 | 70 |
| பாகற்காய் | 200 | 220 | 150 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 60 |
| கரணைக்கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 180 | 200 | 120 |
| லீக்ஸ் | 70 | 80 | 100 |
| பீற்றூட் | 120 | 140 | 120 |
| கறிமிளகாய் | 200 | 220 | -- |
| முருங்கைக்காய் | -- | -- | -- |
| போஞ்சி | 160 | 180 | -- |
| கத்தரி தம்புள்ள | 140 | 160 | 120 |
| கீரை - 1 பிடி | 35 | 40 | 30 |
| தேசிக்காய் | 80 | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 30 |







மு.சிங்கராயர் எழுதிய பாஷையூரும் நாட்டுக்கூத்தும் நூல் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் நா.சண்முகலிங்கன், கவிஞர் சோ.பத்மநாதன் ஆகியோர் உரைநிகழ்த்துவதையும், அருகில் நூலாசிரியர் யோ.யோன்சன்ராஜ்குமார், அருட்தந்தை அருட்திரு மில்வர்வாஸ், சட்டத்தரணி ரி.எம்.அந்தோனிப்பிள்ளை மற்றும் ஏனைய விருநத்தினர்கள் அமர்ந்திருப்பதையும், விரிவுரையாளர் பா.அகிலன் மதிப்பீட்டுரை நிகழ்த்துவதையும், பிரதம விருந்தினரிடமிருந்து சட்டத்தரணி ரி.எம்.அந்தோனிப்பிள்ளை முதற்பிரதியைப் பெறுவதையும் படங்களில் காணலாம்.

## ஆத்மசாந்திப் பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

நவாலியூர் பிரதிஸ்டா சிரோன்மணி பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நவாலி சிந்தாமணி விநாயகர் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அந்தண சிவாச்சார்யார்களும் சமயப் பெரியார்களும் இரங்கலுரை நிகழ்த்தவுள்ளனர். (6-4)

## பட்டிப்பொங்கல் விழா

(யாழ்ப்பாணம்)

பசுக்கள் இடபங்களைப் பாதுகாப்பதற்கான சகல சமய நிறுவனங்களின் இணையம் நடத்தும் பட்டிப்பொங்கல் விழா இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு இணையத் தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதீனமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாச்சார்ய சுவாமிகள், இணுவில் தர்மசாஸ்தா குருகுல தலைவர் சிவாகம ஞானபானு சிவஸ்ரீ தாணு மஹாதேவக் குருக்கள் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

மேலும் " கோமாதா எங்கள் குலமாதா" என்னும் விடயம் பற்றி அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் செயலாளர் சைவப் புலவர் செ.கந்தசத்தியதாஸன், " பசுவதை கொடிய பாவம்" என்னும் விடயம் பற்றி மாவை சிவநாதம் பட்டிமன்றக்குழு தலைவர் சைவப் புலவர் க.நித்தியதசீதரன் ஆகியோர் சிறப்புரையாற்றவுள்ளனர். (6-4)

### பருத்தித்துறை - யாழ்ப்பாணம்

# 750 இலக்க பஸ் போக்குவரத்து பாதை விஸ்தரிக்கப்படவுள்ளது

(அல்வாய்)

பருத்தித்துறை -யாழ்ப்பாணம் 750 இலக்க பஸ் போக்குவரத்து பாதை நெருக்கடி காரணமாக விஸ்தரிக்கப்படவுள்ளது.

இதன் முதற்கட்டமாக வல்லைச் சந்தியிலிருந்து நீர்வேலி வரை மதகுகள் யாவும் தள்ளப்பட்டு அகலமாக்கப்பட்டு வீதியின் நடு மையத்திலிருந்து இருமருங்கும் 21 அடி தூரம் அடக்கப்பட்டு அப் பகுதியிலுள்ள வீட்டின் மதில்கள், கைதடி வயோதிபர் இல்ல மதில்கள், புத்தூர் சோமஸ்கந்த வித்தியாலய மதில் ஆகியவை அகற்றப்பட்டு நீர் பாயும் வாய்க்கால்கள் அகலமாக்கப்பட்டு வருகின்றது.

அதேபோல் வல்லைச் சந்தியில் இருந்து பருத்தித்துறை நோக்கி நில அளவையாளர்கள் வீதியின் மையத்திலிருந்து 42 அடி நீளம் கணக்கிடப்பட்டு துரிதகதியில் மதகுகளை விஸ்தரிக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. .

இவ் வேலைத் திட்டத்தை வீதி அபிவிருத்தி சபையினர் பொறுப்பேற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (6-4-19)

## கால்கோள் விழா

(யாழ்ப்பாணம்)

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் தரம் 1 மாணவர்களை வரவேற்கும் கால்கோள் விழா எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு அதிபர் செல்வி ந.பிரதா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையை சிவத்திரு சிவசண்முகவடிவேல் வழங்கவுள்ளதுடன் பிரதம விருந்தினராக ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி ரி.தயாபரராஜா கலந்து கொள்ளவுள்ளார். (6-4)

யாழ்.செய்திகள்

## சித்திரபாட இலவச கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சித்திர பாடத்தின் வளர்ச்சிக்காக பல செயற்றிட்டங்களை புரிந்துவரும் ஆத்திசூடி வீதி கந்தர்மடத்தில் இயங்கும் ஐ.ஏ.ரி. சித்திரப் பயிற்சி நிறுவனத்தில் புதிதாக க.பொ.த. உயர்தர வகுப்பில் சித்திரபாடத்தை தெரிவு செய்துள்ள மாணவர்களுக்கான சித்திர பாட இலவசக் கருத்தரங்கு எதிர்வரும் சனிக்கிழமை காலை10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் பங்குபற்றும் மாணவர்களுக்கு இலவச கையேடும் வழங்கப்படும் என இயக்குநர் அறிவித்துள்ளார். (6)

# சிறுவர்களுக்கான தேசிய கராத்தே போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற மாணவன்



(யாழ்ப்பாணம்)

கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்ற சிறுவர்களுக்கான தேசிய கராத்தே சுற்றுப் போட்டியில் இன்பசிட்டியைச் சேர்ந்த செல்வன் இ.ஆழிக்குமரன் 12 வயதிற்குக் கீழ்ப்பட்டவர்களுக்கான போட்டியில் முதலாமிடம் பெற்று தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

இவர் பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய மாணவனும் பருத்தித்துறை தற்காப்புக் கலையக பிரதம ஆசிரியர் மா.இரத்தினசோதி (கறுப்புப் பட்டி 5வது) (யப்பான், லண்டன்) , எஸ்.சந்திரமோகன் (கறுப்புபட்டி 2 ஆவது) ஆகியோரின் மாணவனும் ஆவார்.

இப்போட்டிகள் விளையாட்டு அமைச்சின் இலங்கை கராத்தே சம்மேளனத்தால் நடத்தப்பட்டது. (6)

### அகில இலங்கை இந்து மாமன்றத்தின்

# யாழ். சைவ ஆராய்ச்சி நிலைய நூலகம் திறப்பு விழாவும் சிறப்பு நிகழ்வுகளும்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் நடத்தப்படும் யாழ். சைவ ஆராய்ச்சி நிலைய நூலக திறப்பு விழாவும் சிறப்பு நிகழ்வுகளும் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு 211/7 கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள இந்துமாமன்றத்தின் யாழ்.பிராந்திய அலுவலகத்தில் மாமன்ற யாழ்.பிராந்திய செயற்பாட்டு அணி தலைவரும், அகில இலங்கை இந்து மாமன்ற உப தலைவருமான ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீ லஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் வழங்கவுள்ளார்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். சைவ ஆராய்ச்சி நிலையத்தின் நூலகத்தை மாமன்றத் தலைவர் வி.கயிலாசபிள்ளை திறக்கவுள்ளார்.

இந்நிகழ்வில் வன்னியிலிருந்து இடம் பெயர்ந்து வவுனியா நலன்புரி முகாம்களில் தங்கியிருந்து யாழ்.பல்கலைக்கழகம் வந்து சேர்ந்த பட்டதாரி மாணவர்களுக்கு லண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன்ஆலய அறங்காவலர் சபையினதும் மனிதநேய நிதியத்தினதும் நிதியுதவியாக வாழ்க்கை நிலைப்படுத்தல் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது. இக் கொடுப்பனவை சிறப்பு விருந்தினராக மாமன்றம் மற்றும் மனிதநேய நிதியத்தின் தலைவர் அ.தேவசகாயம் வழங்கவுள்ளார்.

மேலும் சிறப்பு நிகழ்வுகளாக கணனிப் பயிற்சி வகுப்பு அங்குரார்ப்பணம், மாமன்றத்தின் அம்புலன்ஸ் சேவையை மீளவும் ஆரம்பித்து வைத்தல், தெய்வத்திருமகள் கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களது வாழ்க்கை வரலாற்றை ஆய்வு செய்துவரும் யாழ்.பல்கலைக்கழக பட்டதாரி மாணவருக்கு மாமன்றத்தின் ஊக்குவிப்பு நிதிவழங்கல் என்பனவும் இடம்பெறவுள்ளது.

மேலும் அன்றைய தினம் மாலை 3.30 மணிக்கு அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு அப்பியாசப் புத்தகங்கள் மாமன்ற வெளியீடுகளான இந்து மக்களுக்கு ஒரு கையேடு, சிவவழிபாட்டு மல்ர்வழங்கல் ஆகிய நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதாக அகில இலங்கை இந்துமாமன்ற பொதுச் செயலாளர் கந்தையா நீலகண்டன் தெரிவித்துள்ளார். (6-4)

# சுவாமி விவேகானந்தர் விழா




(யாழ்ப்பாணம்)

யாழ்.வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இந்துமாமன்றம் நடத் தும் சுவாமி விவேகானந்தர் விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு அதிபர் திருமதி க.பொன்னம்பலம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா உரைநிகழ்த்த வுள்ளதுடன் சுவாமி விவேகானந்தரின் கைநூலினை கல்லூரி அதிபர் வெளியிட்டு வைக்கவுள்ளார். (6-4)

# — கணனிப் பயிற்சி — சான்றிதழ் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் சண்டிலிப்பாய் பிரிவில் கணனிப் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்வழங்கும் நிகழ்வு நாளை சனிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு 3ஆம் கட்டை ஆனைக்கோட்டையில் அமைந்துள்ள சண்டிலிப்பாய் பிரிவில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மானிப்பாய் திருக்குடும்ப கன்னியர்மடம் வித்தியாலயத்தின் ஓய்வுபெற்ற அதிபர் அருட்சகோதரி லீயோ சபரிமுத்து கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையின் தலைவர், பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம், யாழ்.கிளையின் உபதலைவர் வைத்தியகலாநிதி வை.தியாகராஜா, கௌரவ விருந்தினராக யாழ்.கிளையின் பொருளாளர் தி.உதயசூரியன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (6-4)

# நாயக்கர் கால சிற்பக்கலை

103

நந்திதேவரின் இருபக்கங்களிலும் வியாக்கிரபாதர், பதஞ்சலி ஆகியோர் காணப் படுகின்றனர். அதே தூணின் வேறொரு பக்கத்தில் மகாவிஷ்ணு மேளங்கொட்ட தும்புரு, நாரதர் ஆகியோர் வீணை இசைக்கின்றனர். அத்துடன் மிக மெலிந்த தோற்றத்துடன் காளியின் உருவமும் தெரிகின்றது. தூணின் அடுத்த பக்கத்திலே பிரமா தாளம் போடுங் காட்சி தெரிகின்றது. திருநடம் காண்பதற்கு வந்த மற்றையை தேவர்களதும் ரிஷிகளதும் உருவங்கள் தெரிகின்றன. தூணின் வேறொரு பக்கத்தில் காமதகனரின் உருவம் அமைந்துள்ளது.



வசந்த மண்டபம்

கம்பத்தடி மண்டபத்திலுள்ள நான்காவது தூணிலே சந்திரசேகரர், இலிங்கோற்பவர், ரிஷபாந்திகர், இராவண அனுக்கிரக மூர்த்தி ஆகியோரின் உருவங்கள் ஆகம விதிகளுக்கு அமைய அழகாக அமைக்கப்பட்டுள்ளன.

### 7. ரிஷபாந்திகர்

காளையிற் மேற்சிவனும் பார்வதியும் அமைந்திருக்கும் உருவம் ரிஷபாரூடரின் வடிவம் போன்றதாகும். காளை தலையை உயர்த்தி நிற்குங் கோலம் இவ்வடிவத்தின் சிறப்பம்சமாகும். சிவனுடைய முன் வலக்கரம் அபயஹஸ்தமானது. அதன் பின்னமைந்த கரம் மழு ஏந்தியுள்ள கோலமானது முன் இடக்கரம் தொடையில் தங்கும் வண்ணமாக அமைந்துள்ளது. பின் இடக்கரம் மான் ஏந்திய கோலமானது. சிவனதும் அம்மனதும் கால்கள் அமைந்திருக்கும் கோலம் ஆகமப் பிரகாரமானது.

### 8.இலிங்கோற்பவர்

கம்பத்தடி மண்டபத்திலே தூண் ஒன்றிலே ரிஷபாந்தகரின் உருவத்திற்கு வலப் பக்கத்திலே இலிங்கோற்பவரின் உருவம்



நடராஜர் சிலை

அமைந்துள்ளது. இலிங்கம் நான்கு பட்டைத் தூண்போல் ஆனது. அதன் கோணங்கள் வட்டமாகச் செதுக்கப்பட்டுள்ளன. வழமை போலச் சிவனுடைய உருவம் இலிங்கத்தில் இருந்து வெளிப்படுமாற் போல் உருவாக்கப்பட்டுள்ளது.

முழங்காலின் கீழ் அமைந்த பகுதி உருவத்திலே செதுக்கப்படவில்லை. சிவனுடைய கோலம் சந்திரசேகரர் வடிவமாகும். முன் வலக்கரம் அபயஹஸ்தமாகும். முன் இடக்கரம் தொடையில் தங்கியுள்ளது. இலிங்கத்தின் மேற்பக்கத்திலே அன்னப்பறவையின் உருவமும் பிரமாவின் தலையும் கைகளும் செதுக்கப்பட்டுள்ளன.திருமால் வராக அவதாரமாக வருங்காட்சி இலிங்கத்தின் அடியிலே தெரிகின்றது. வலப்பக்கத்திலே பிரமனும் இடப்பக்கத்திலே விஷ்ணுவும் கைகூப்பி வணங்குங் கோலத்திலே காணப்படுகின்றனர்.

இதனைப் போன்ற இலிங்கோற்பவரின் வடிவங்கள் எல்லோராவிலுள்ள கைலாசநாதர் கோயிலும் தசாவதார குடபோகத்திலுங் காணப்படுகின்றன. கீழமாத்தூர் சிவாலயத்திலும் இவ்வாறான வடிவம் உண்டு. இலிங்கத்திலிருந்து சிவன் வெளிப்படுவதும் மேலே பிரமன் பறந்து செல்வதும் அடியிலே திருமால் வராகமாகி நிலத்தை உழுவதும் அதிலே சிறப்பாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன.

### 9.இராவண அனுக்கிரக மூர்த்தி

கைலாய மலையை இராவணன் பெயர்க்க முற்படுங் காட்சி இரண்டு சிற்பங்களில் அமைந்துள்ளது. அவற்றில் ஒன்று புது மண்டபத்திலே காணப்படுகின்றது. அது மிகச் சிறப்பாக அமைந்திருக்கின்றது. சிவனும் பார்வதியும் உமாசகிதர் கோலத்திலே அமைத் திருக்குங் காட்சி புதுமண்டபத்துச் சிற்பத்திலே காணப்படுகின்றது. அவர்களின் ஆசனத்தின் கீழ் வழமை போலக் கைலாய மலையின் உருவம் அமைக்கப்பட்டுள்ளது. முனிவர் கணங்கள் இறைவனை இறைஞ் சிய கோலத்திற் காணப்படுகின்றனர். இராவணன் முன்னால் முழந்தாளில் நின்ற பத்துத் தலைகளையும் சாய்த்து இருப்பது கரங்களையுங் கூப்பிச் சிவனின் பெருமைகளைப் பாடுங் காட்சி வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதைப்போன்ற சிற்பம் ஒன்று கம்பத்தடி மண்டபத்துத் தூண் ஒன்றில் அமைந் துள்ளது. அதிலே பீடத்திற் கூடுதலான அலங்கார வேலைப்பாடுகள் காணப்படுகின்றன. சிவனுடைய முன் கரங்கள் அமைந்துள்ள விதமும் சற்று வேறுபட்டதாகும். இராவணனுடைய வதனம் ரௌத்தர பாவத்துடனும உமாசகிதரின் கோலம் சார்ந்த சொரூபமாகவும் அமைந்துள்ளன.

### 10.விருஷப வாகனர்

சிவனும் பார்வதியும் உமாசகிதர் கோலத் தில் இட்பத்தின்மேல் அமர்ந் திருக்கும் காட்சி கம்பத்தடி மண்டபத் தூண் ஒன்றிலே செதுக் கப்பட்டுள்ளது. வஸ்திராபரணங்களும், அங்க இலக்ஷணங்களும், முத்திரைகளும் வழமை போலக் காணப்படுகின்றன.

### 11.ஏகபாத மூர்த்தி

ரிஷபாரூடர் வடிவம் அமைந்திருக்கும் அதே பக்கத்தில் ஏகபாத மூர்த்தியின் உருவமுங் காணப்படுகின்றனது. அதனையொத்த வடிவம் ஒன்று புது மண்டபத்திலும் அமைந் திருக்கின்றது. இரண்டு உருவங்களும் சில அம்சங்களில் வேறுபாடுகளைக் கொண்டுள்ளன.

புதுமண்டபத்திலுள்ள படிமத்திலே சிவனது வலப்பக்கத்தில் இருப்பது பிரமனும் இடப்பக்கத்தில் இருந்து மகாவிஷ்ணுவும் தோன்றுகின்றனர். இருவரின் வடிவங்களிலும் கால்கள் தெரியவில்லை. முன்னிரு கரங்களும் அஞ்சலி ஹஸ்தமாய் அமைந்திருக்கின்றன. பின்னுள்ள கரங்கள் வழமையான சின்னங்களை ஏந்திய வண்ணமாயுள்ளன. கம்பத்தடி மண்டபத்துச் சிற்பத்திலே சிவனுடைய உருவம் மட்டுமே தெரிகின்றது. அதிலே பிரமனதும் விஷ்ணுவினதும் உருவங்கள் காணப்படவில்லை. ஏகபாத மூர்த்தியின் உருவத்தன் கீழ் மூன்று கோயில்களின் பிரதிமைகள் அமைக்கப்பட்டுள்ளன.

### 12. அர்த்தநாரி வடிவம்

அதே தூணில் அர்த்தநாரி வடிவம் அமைந்திருக்கின்றது. அதிலே வழமைபோல வலப்பக்கத்தில் ஈஸ்வரனுக்குரிய லக்ஷணங்களும் இடப்பக்கத்திலே அம்மனுக்குரிய அம்சங்களும் அமைந்திருக்கின்றன. பார்வதியின் கை லோலஹஸ்தமான தொங்கு கரமாயுள்ளது. வடிவத்திலே சிவனுக்குரிய பாதியில் முன்கரம் அபயஹஸ்தமாக அமைந்திருக் கையில் பின்கரம் மழு ஏந்திய கோலத்திற் காணப்படுகின்றது.புது மண்டபத்திலுள்ள அர்த்தநாரியின் வடிவம் கூடிய வனப்புடன் அமைக்கப்பட்டுள்ளது.அதிலே அம்மனின் பாகத்தில் இரண்டு கரங்கள் காணப்படுகின்றன.முன்கரம் லோல ஹஸ்தமாகும்.

### 13. ஹரிஹர மூர்த்தி

அர்த்தநாரியின் இடப்பக்கத்தில் அமைந்திருக்கினற் ஹரிஹர மூர்த்தியின் வடிவத்தின் ஒரு பாகம் சிவனுக்குரிய அம்சங்களையும் மற்றப் பாகம் திருமாலின் அம்சங்களையும் கொண்டுள்ளது. அர்த்தநாரி வடிவத்தைப் போல இதிலே வலப்பாகத்திற் சிவனுக்குரிய அம்சங்கள் காணப்படுகின்றன. அதில் முன் கரம் அபயகரமாக அமைந் துள்ளது. பின்கரம் கதையினைப் பிடித்த வண்ணமா யுள்ளது. பின்கரம் சக்கரம் ஏந்திய நிலையிற் காணப்படுகின்றது.

இதனை ஒத்த உன்னதமான வேலைப் பாடு கொண்ட சிற்பம் ஒன்று புதுமண்டபத்திலே காணப்படுகின்றது. அதிலே இடப்பாகத்தில் விஷ்ணுவின் முன்கரம் கடஹஹஸ் தமாய் அமைந் திருக்கின்றது. அதன் உருவம் பெரியது. மிகுந்த வனப்புடையது.

### 14.தக்ஷிணாமூர்த்தி

அதே தூணின் வடக்கு முகத்திலே தக்ஷி ணாமூர்த்தியின் வடிவம் செதுக் கப்பட்டுள்ளது. கைலாசமலையிலே ஆலமரத்தின் கீழே யோகாசனக் கோலத்திலே ஈஸ்வரன் அமர்த்திருங் காட்சி சிறப்பான முறையிலே செதுக்கப்பட்டுள்ளது. முழங்கால் மட்டத்தில் மடித்துத் தொங்கும் வலக்கால் முயலகன் மேல் தங்கும் நிலையில் உள்ளது. இடக்கால் மடித்து வலக்கால் மேல் அமைத் திருக்குங் கோலத்தில் உள்ளது.

இறைவனை வணங்கும் ரிஷிகளதும் முனிவர்களது உருவங்கள் தெரிகின்றன. தக்ஷிணாமூர்த்தி உருவத்திற்கு எதிரில் அமைந்துள்ள தூணில் காமதகனரின் சிற்பம் அமைந்திருக்கின்றது.தலையிலே ஜடாபாரம் அமைந்திருக்கின்றது. முன் வலக்கரம் ஞான முத்திரையில் அமைந்துள்ளது. முன் இடக் கரம் வரதகரமாகும்.

### 15.கஜகார மூர்த்தி

மதுரைக் கோயிலின் கஜஹார மூர்த்தியின் இரண்டு வடிவங்கள் உள்ளன. அவற்றில் ஒன்று கம்பத்தடி மண்டபத்தில் தக்ஷிணா மூர்த்தியின் சிற்பம் காணப்படும் தூணின் அருகிலுள்ள கம்பத்திலே காணப் படுகின்றது.

மற்றையது புது மண்டபத்தில் இருக்கின்றது. கம்பத்தடி மண்டபத்துச் சிற்பம் மரபு வழியான வேலைப்பாடுகளுடன் அமைந் திருப்பதோடு அலங்காரத் தோற்றத் துடனும் காணப்படுகின்றது. சிவனின் உருவம் எட்டுக் கரங்களுடன் அமைக்கப்பட் டுள்ளது. பின் கரங்கள் இரண்டும் யானைத் தோலைப் பிடித்த கோலத்தில் உள்ளன. மழு, சூலம், அம்பு ஆகிய படைக்கலங்கள் வலக் கரங்கள் மூன்றில் அமைந்திருக்கின்றன. மான், கபாலம், வில் ஆகியவற்றின் வடிவங் கள் வலக்கரங்கள மூன்றிலே காணப்படுகின் றன.

வலக்கால் முற்புறமாக உயர்த்தி யானையில் தோளில் தங்கும் வண்ணமாக அமைந் திருக்கின்றது. பிரதிமையின் பீடத்திலே இறைவனை வணங்கும் முனிவர்களின் உருவங் கள் சிறப்பாகச் செதுக்கப்பட்டுள்ளன.

கம்பத்தடித் தூணிலே சிவனுடைய கோலத்தைக் கண்டு பயத்தினால் உருக் குலைந்த கோலத்தில் நிற்கும் பார்வதியின் உருவம் அமைந்திருக்கின்றது.அம்மனின் அருகிலே குமாரக் கடவுளின் வடிவம் தெரி கின்றது.

### 16.பிச்சாடனர்

மதுரையிலே பிச்சாடனரின் உருவங்கள் கோயிலின் பல பகுதிகளிற் காணப்படுகின் றன. கம்பத்தடி மண்டபம், ஆயிரங்கால் மண்டபம், முதலி மண்டபம் ஆகியவற்றி லுள்ள தூண்களிலும் சுந்தரேஸ்வரர் கோயில் முதலாம் பிரகாரத்திலும் அவ்வுரு வங்கள் காணப்படுகின்றன. கோபுரங்களின் பல இடங்களிலே பிச்சாடனரின் சுதை உருவங் கள் அமைந்துள்ளன. பிச்சாடனரின் மூன்று அடி உயரமான உலோகப் படிமம் ஒன்று சுவாமி கோயிலில் நடைபெறும் உற்சவங்கள் சிலவற்றிலே எழுந்தருளியாக எடுத்துச் செல் லப்படும். ஆயிரங்கால் மண்டபத்திலுள்ள



கம்பத்தடி மண்டபம்

சிற்பமே அவை எல்லாவற் றிலும் மிகுந்த வனப்புடையதாகும். அதன் உயரம் ஆற டிக்கு மேலானது அதில் நான்கு கரங்கள் அமைந்துள்ளன. முன்வலக் கரமா னது மான் ஒன்றின் தலையிலே தங்கியிருக் கின்றது. பின் வலக்கரம் சூலம் ஏந்திய கோல மானது. முன்னிடக் கரத்திலே கபாலந் தெரி கின்றது. பிச்சாடனரைச் சுற்றி அரவங் காணப்படுகின்றது. காலிலே பாதணிகளும் கண்டாமணிகளும் தெரிகின்றன. இடப்பக் கத்திலே ரிஷிபத்தினிகள் இடுகின்ற பிக்ஷை யினை ஏந்தும் கலசத்தோடு வாமனக் கோல மான ஒருவரின் உருவம் அமைந்துள்ளது.

பேராசிரியர் சி.பத்மநாதன்

தூணின் மற்றொரு முகத்திலே அன சூயா முதலான ரிஷிபத்தினி களின் உருவங் கள் அமைக்கப்பட்டுள்ளன. கம்பத்தடி மண்டபத் துச் சிற்பத்தில் அங்கங்களின் அளவுப் பிரமாணங்கள் பொருத்தமான வகையில் அமைக் கப்படவில்லை. மானினுடைய உருவம் செம் மையாக அமையவில்லை. அதிலே ரிஷிபத் தினிகளின் உருவங்களும் அமைக்கப்பட வில்லை.

(தொடரும்)

# தேர்தல் வன்முறைகளைக் கட்டுப்படுத்த அனைவரும் நடவடிக்கை எடுக்கவேண்டும்

## சர்வமதத் தலைவர்கள்

(கொழும்பு)

தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் நாளுக்கு நாள் உயர்வடைந்து செல்வதாகவும் அதனைக் கட்டுப்படுத்த அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டுமெனவும் சர்வ மதத் தலைவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதற்கமைய தேவை ஏற்படின் அரசியல் கட்சி ஆதரவாளர்களிடையே இணக்கப்பாட்டை ஏற்படுத்தத் தயார் என மதத் தலைவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தற்போது தேர்தல் வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துச் செல்வதாகத் தேர்தல் வன்முறைகளைக் கட்டுப்படுத்தும் சர்வமத அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளதுடன் இதற்காக தேர்தலில் போட்டியிடும் 22 வேட்பாளர்களிடமும் வன்ம்முறையில் ஈடுபடுவதில்லை என உறுதிமொழி ஒன்றைப் பெற்றுக்கொள்ளவும் மதத் தலைவர்கள் தீர்மானித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பௌத்த மத நாயக்கத் தேரர்கள், இந்து மதத் தலைவர்கள், கத்தோலிக்க பேராயர்கள் மற்றும் இஸ்லாம் மதக் குருமார்கள் ஆகியோர் இந்தக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

இவ்வன்முறைகள் தொடர்பாக ஏற்கனவே 12 வேட்பாளர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும் பிரதான வேட்பாளர்கள் தீவிர பிரசார நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதனால் அவர்களைச் சந்திப்பதில் சிக்கல் நிலைமை காணப்படுவதாக சர்வமதத் தலைவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மேலும் தேர்தல் ஆணையாளருக்குப் போதிய அதிகாரங்கள் காணப்படாமையானது வன்முறைச் சம்பவங்கள் தலைதூக்குவதற்குப் பிரதான காரணம் என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். (2-6)

# சரத் பொன்சேகா மீது நம்பிக்கை வைக்கலாம்

## சரத் என் சில்வா

(கொழும்பு)

எதிர்காலத்தில் தமிழ் பேசும் மக்கள் ஏமாற்றப்படுவது போன்று தோன்றினால் இந்தக் கூட்டணியுடனான எனது பயணம் நின்றுவிடும். அது சரத் பொன்சேகாவோ அல்லது ரணில் விக்கிரமசிங்கவாகவோ இருந்தாலும் பறவாயில்லை என்று முன்னாள் நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் எமது வரலாற்றில் அரசியல்வாதிகள் அதிகாரத்தைப் பெறுவதற்கான நடவடிக்கைகளிலேயே ஈடுபட்டனர். எனினும் முதல் தடவையாக தான் அதிகாரத்தைக் கைவிடுவதாகக் கூறிக் கொண்டு ஒருவர் வருகிறார். எனவே பொன்சேகா மீது நம்பிக்கை வைக்கலாம் என்று சரத் என் சில்வா தெரிவித்துள்ளார். (2-6)

# முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிற்கு ஆதரவு



(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி ஹமில் டன் வனசிங்க, ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் நிட்டம்புவ பிரதேசத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன் றில் முன்னாள் இராணுவத் தளபதி ஹமில் டன் வனசிங்க கலந்து கொண்டு சரத் பொன் சேகாவிற்கு ஆதரவளிப்பதாக உறுதியளித்துள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு ஆதரவளிக்கும் முதலாவது முன்னாள் இராணுவத் தளபதி ஹமில்டன் வனசிங்க என்பது குறிப்பிடத்தக்கது. (2-6)




# போலிக்குற்றச்சாட்டுக்களை எம்மீது சுமத்தி வாக்குகளைச் சேகரிக்க முனைகிறார் பொன்சேகா

## கோத்தபாய



(கொழும்பு)

ஜெனரல் சரத் பொன்சேகா அரசாங்கத்திற்கு எதிராக போலிக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி மக்களிடமிருந்து வாக்குகளைப் பெற்றுக்கொள்ள முயற்சிப்பதாக பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வெற்றியின் கதை இன்றும் நாளையும் என்ற தொனிப் பொருளில் பாதுகாப்புச் செயலாளரினால் நடத்தப்பட்டுவரும் விழிப்புணர்வு நடவடிக்கையின் ஓர் கட்டமாக அண்மையில் மொரட்டுவையில் நடைபெற்ற கருத்தரங்கில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ராஜபக்ஷ சகோதரர்களுக்கு எதிராக சேறுபூசுவதன் மூலம் தேர்தலில் வெற்றியீட்ட முடியும் என ஜெனரல் சரத் பொன்சேகா தப்புக் கணக்குப் போட்டுள்ளார்.

ராஜபக்ஷ குடும்பம் மக்களின் சொத்துக்களை சுரண்டியதில்லை. தமக்கு இருக்கும் மிகப் பெரிய சொத்து மக்களே எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் ஊழல் மோசடிகள் மேற்கொள்ளப்படிருந்தால் அது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் வெறுமனே குற்றச்சாட்டுக்களை அடுக்காது சட்ட ரீதியாக தம்மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை நிருபிக்குமாறு அவர் சவால் விடுத்துள்ளார். (2-6)

# மோசமான நிலையினை அடைந்துள்ள தேர்தல் பிரசார நடவடிக்கைகள்

## திஸ்ஸ அத்தநாயக்க



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் மிகவும் மோசமான நிலையை அடைந்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களை நடாத்துவதற்கு ஆளும் கட்சியினர் சந்தர்ப்பம் வழங்கத் தவறியுள்ளதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது ஜெனரல் சரத் பொன்சேகாவின் பெயரைப் பயன்படுத்தி சேறுபூசும் நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளதாகவும் எதிர்க்கட்சிகளின் வேட்பாளருக்கு அவதூறு ஏற்படும் வகையில் செயற்படுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. ஆனால் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக மட்டும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். மேலும் அரசாங்கத்தின் அடக்குமுறை கலாசாரத்திற்கு எதிரான அணி திரள வேண் டிய நேரம் மலர்ந்துள்ளதாகவும் அவர் குறிப் பிட்டுள்ளார். (26)

# தேர்தல் காலத்தில் மட்டும் மக்களை நினைவில் கொள்ளும் அரசியல் வாதிகள்

## சரத் அமுனுகம குற்றச்சாட்டு

(கொழும்பு)

தேர்தல் காலத்தில் மட்டுமே அரசியல்வாதிகளுக்கு மக்கள் நினைவுக்கு வருவதாக பொது நிர்வாக அமைச்சர் சரத்அமுனுகம தெரிவித்துள்ளார்.

அநேகமான அரசியல்வாதிக்ள தேர்தல் காலத்தில் மட்டுமே மக்களுடன் தொடர்புகளைப் பேணுவதாகவும் அதன் பின்னர் மறந்து விடுவதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

தேர்தல் காலத்தில் சிறிய கூடாரமொன்றை அமைத்தேனும் அரசியல்வாதிகள் மக்களுடன் இருப்பதாகவும் தேர்தல் முடிந்தவுடன் குறித்த கூடாரங்கள் அகற்றப்பட்டு விடும் எனவும் தெரிவித்துள்ள அவர்,

சந்தர்ப்பவாத அரசியல் கலாசாரத்தை களைந்து மக்களுக்கு நேர்மையாக சேவையாற்றக் கூடிய அரசியல் சூழ்நிலை உருவாக்கப்படவேண்டுமென குறிப்பிட்டுள்ளார்.

மேலும் மக்களுடன் என்றும் நிலைத்திருக்கும் அரசியல்வாதி தேர்தல்களில் தோல்வியடைவதில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (2-6)



ஹோமாகமவில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ஜனாதிபதி...

# பொன்சேகா அரச தலைவரானால் இந்தியாவுக்கு அது தலையிடியாம்;

## விளக்கமளிக்கிறார் மஹிந்தவின் ஆலோசகர்



(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் சரத் பொன்சேகா தெரிவு செய்யப்பட்டால் அது இந்தியாவுக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக இருக்குமென மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசகரும் அவரது மிக நெருக்கத்திற்கு உரியவருமான றசீக் சறூக் தெரிவித்துள்ளார்.

அத்துடன் சீனா போன்ற நாடுகளை போல அல்லாமல் எந்தவித நிபந்தனைகளும் இன்றி, இந்தியாதான் இலங்கைக்கு தேவையாகவிருந்த முக்கியமான உதவிகளை போரின்போது வழங்கியதாகவும் அவர் கூறியுள்ளார்.

யூகோஸ்லாவியா, ஹங்கேரி போன்ற நாடுகளின் முன்னாள் இலங்கைத் தூதுவராகவும் சிங்கப்பூரின் முன்னாள் உயர் ஸ்தானிகராகவும் கடமையாற்றிய றசீக் சறூக் போர்க்காலத்தின் போதான இந்திய உதவிகளையும் தற்போதைய தேர்தல் தொடர்பான இந்தியாவின் நிலைப்பாடுகளையும் நேர்காணல் ஒன்றில் விளங்கப்படுத்தினார்.

றசீக் சறூக் வழங்கிய நேர்காணலின் முக்கிய பகுதிகள் வருமாறு,

ஒரு இராணுவ அதிகாரி ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவது நல்லதல்ல. பாகிஸ்தானில், பங்களாதேசில், பர்மாவில் நடைபெறும் நிகழ்வுகளே இதற்கு நல்ல படிப்பினைகளாகும்.

இந்தியாவை பொறுத்தவரை அதன் பிராந்திய பாதுகாப்பு முக்கியமானதாகும். இந்தியாவின் அணுவலு நிலையங்கள் தென்னிந்தியாவை நோக்கி நகர்த்தப்பட்டுள்ளன. இதற்கு பிரதான காரணம் ஒரு பக்கம் பாகிஸ்தான் மற்றைய பக்கம் சீனா ஆகும்.

இதனால் தான் அருகிலுள்ள இலங்கையுடன் நல்ல உறவுநிலைகளை பேணவேண்டிய தேவை இந்தியாவுக்கு உண்டு. இந்தியா எம்மோடு நெருங்கிய உறவுநிலையை பேணாவிட்டால் நாம் சீனா நோக்கி எமது பார்வையை திருப்புவோம். அது இந்தியாவின் நலன்களுக்கு சாதகமான விடயமாக இருக்காது.

அதனால் தான் இந்தியா எப்போதும் எமக்கு உதவி செய்து கொண்டிருக்கிறது. உதாரணமாக சர்வதேச நாணய நிதியம் 2.4 மில்லியன் டொலர் கடனை தரமறுத்த போது எம்மிடம் வேறு தெரிவுகள் இருக்கவில்லை. நாங்கள் சீனாவிடம் தான் கடன் கேட்க வேண்டிய நிலையிருந்தது.

அப்போது சர்வதேச நாணய நிதியம் கடனை தராவிட்டால் இந்தியாதான் அதனைத் தர இருப்பதாகக் கூறியது. அவ்வாறு தான் இந்தியாவின் கேந்திர நலன்கள் எமது வெளியுறவுக் கொள்கைகளைத் தீர்மானிக்கின்றன.

இந்தியா பல வழிகளில் எமக்கு உதவி செய்தது. எமது கடற்படையினருக்குத் தேவையான புலனாய்வு தகவல்களைத் திரட்டிக் கொடுத்தது.

அத்துடன் ஆழ்கடல் கண்காணிப்பு படகுகளை தந்ததன் மூலம் விடுதலைப்புலிகளின் கப்பல்களைத் தடுக்க முடிந்தது. இந்தியாவின் உதவி மூலம் விடுதலைப்புலிகளின் பத்து கப்பல்கள் அழிக்கப்பட்டன. இதுதான் போரின் திருப்பு முனையைத் தீர்மானித்தது.

எமக்கு வெடிபொருட்கள் தட்டுப்பாடு ஏற்பட்டபோது பாகிஸ்தான் வான் வழியாகவே அதனை உடனடியாக விநியோகித்தது. அனைத்து போர்க்கருவிகளையும் வெடிபொருட்களையும் சீனா முழுமையாக விநியோகித்தது.

ஒரு கட்டத்தில் சரத் பொன்சேகா மூலம் இலங்கையில் ஆட்சிக்கவிழ்ப்பு ஏற்படக் கூடிய சூழல் எதிர்ப்பார்க்கப்பட்டது. அப்போதும் இந்தியாதான் அதனை தடுப்பதற்குரிய ஆயத்தங்களை மேற்கொண்டு எவ்வேளையிலும் உதவ தயாராகவிருந்தது.

இராணுவத் தளபதியாகவிருந்த சரத் பொன்சேகா தனது அடுத்த பதவி நிலைக்கு உயர்த்தப்பட்டபோது தனது சொந்தப் படைப் பிரிவை தனது தலைமையகத்திற்கு கொண்டு வரவிருப்பினார்.

ஆனால் அதனை அரசு விரும்பவில்லை. இதனைத் தொடர்ந்தே சந்தேகங்கள் உருவானது.

முக்கியமாக வன்னிப் பகுதிகளில் மன்னார், கிளிநொச்சி தொடங்கி முல்லைத்தீவு வரை இராணுவ குடியிருப்புக்களை அமைக்க சரத் பொன்சேகா விரும்பினார். இராணுவக் குடியிருப்புக்கள் என்பது படையினர் தமது குடும்பத்தினரோடு படைத்தளங்களில் வசிப்பதாகும்.

இது இனப்பிரச்சினையை மேலும் சிக்கலாக்கும். அவ்வாறான குடியிருப்புக்களை அனுமதிக்க மகிந்த ராஜபக்ஷ விரும்பவில்லை.

அதேவேளை போர் முடிவடைந்த பின்னர் 100000-150000 வரையான இராணுவத்தினரைப் புதிதாக சேர்த்துக்கொள்ள வேண்டுமெனவும் சரத் பொன்சேகா விரும்பினார்.



இதன் மூலம் தமிழர்களின் ஆட்பரம்பலை வடக்கு கிழக்கில் மாற்ற அவர் விரும்பினார்.

அத்துடன் சிறுபான்மையினருக்கு இந்நாட்டில் இடமில்லை என சரத் பொன்சேகா ஏற்கனவே பல கருத்துக்களை தெரிவித்திருந்தார். இவைதான் ஒரு இராணுவப் புரட்சி ஏற்படலாம் என்ற சந்தேகங்களைத் தோற்று வித்தது.

எனவே இலங்கையில் இராணுவத்துறையைச் சேர்ந்த ஒருவர் அரச தலைவராகத் தெரிவு செய்யப்படுவது இந்தியாவுக்கு அச்சுறுத்தலான ஒரு விடயமாகவே இருக்கும் என றசீக் சறூக் றெடிஃப் இணையதளத்திற்கு வழங்கிய தனது நேர்காணலில் தெரிவித்தார்.

# டப்ளின் விசாரணை தொடர்பில் இலங்கை அரசாங்கம் கடும் அதிருப்தி

(கொழும்பு)

டப்ளின் போர்க்குற்ற விசாரணைகள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் கடும் அதிருப்தியை வெளியிட்டுள்ளதாக திவயின செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்கமைய இந்த விசாரணைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என இலங்கை அரசாங்கம் அயர்லாந்து அரசாங்கத்திற்கு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

இந்த நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம் அயர்லாந்து பயங்கரவாதத்திற்கு துணை நிற்பதாக இலங்கை விமர்சித்துள்ளது.

மேலும் வெளிநாட்டு நிதியில் வாழ்க்கையை நடத்தும் இலங்கையர் ஒருவரே இந்த விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக இலங்கை அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (2-6)

# 14 வெளிநாட்டவர்கள் கொழும்பில் கைது

(கொழும்பு)

விசா அனுமதி முடிவடைந்த நிலையில் தங்கியிருந்த 14 வெளிநாட்டவர்க்ள் நேற்று முன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்

மேற்படி 14 வெளிநாட்டவர்களும் சுற்றுலா வீசா முடிவடைந்தும் தமது நாடுகளுக்குச் செல்லாது தொடர்ந்து தங்கியிருந்தமையினாலே கைது செய்யப்பட்டுள்ளதாக குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தின் விசாரணைப் பிரிவு தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்டவர்களில் 6 பேர் தெற்காசிய நாடுகளிலிருந்து சுற்றுலா வீசாவைப் பெற்று இலங்கைக்கு குடியேறியதாக முதற் கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்த 6 பேரும் செட்டியார் தெரு, புறக்கோட்டை, கொழும்பின் புறநகர்ப் பகுதிகளில் உள்ள நகைக் கடைகளில் தொழில் புரிந்துள்ளனர்.

மற்றும் பலர் கொழும்பின் உணவகங்களில் பணியாற்றியுள்ளனர்.

வெளிநாட்டவர்கள் சுற்றுலா அனுமதியினை பயன்படுத்தி இலங்கைக்கு வருபவர்கள் தொழில் நடவடிக்கையில் ஈடுபடுவதும் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதும் கால எல்லை முடிவடைந்தும் தங்கியிருப்பதும் இலங்கை சட்டங்களுக்கு முரணான செயல் என்றும் குடிவரவு, குடியகல்வு திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (2)






இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க காரைநகர் கிளைத் தொண்டர்கள் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தும் விழிப்புணர்வுப் பிரசாரத்திற்காக செல்லுமுன் பிரிவின் தலைவர் சோ. விக்னேஸ்வரன் மற்றும் பொதுச் சுகா தாரப் பரிசோதகர் கருணாநிதி ஆகியோர் தொண்டர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கி பிரசுரங்களை கையளிப்பதை முதலாவது படத்திலும் தொண்டர்கள் பிரசாரத்தில் ஈடுபடுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

## வெள்ளைப் பச்சரிசி 50 ரூபா

(கொழும்பு)

பாகிஸ்தானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட வெள்ளைப் பச்சை அரிசி கிலோவொன்று 50 ரூபா வீதம் நாடு முழுவதும் விற்பனை செய்யப்படுமென்று வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் பந்துல குணவர்த்தன நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

கூட்டுறவுக் கடைகள் மூலம் இதனைப் பெற்றுக்கொள்ள முடியுமென்றும் அவர் கூறியுள்ளார். தற்போது பொதுமக்களுக்கு விநியோகிப்பதற்காக பாகிஸ்தானிலிருந்து 5 ஆயிரம் மெட்டிற்தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் பந்துல தெரிவித்தார். (2-6)

# ஜனாதிபதியின் அரசியல் தீர்வு அறிவிப்பானது தமிழ் மக்களை ஏமாற்றும் நடவடிக்கை

## இடது சாரி முன்னணி

(கொழும்பு)

உண்ணாவிரதமிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்காத ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் எவ்வாறு தமிழ் மக்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வை வழங்கப்போகிறது என்று இடது சாரி முன்னணியின் அமைப்புச் செயலாளர் சமில் ஜயநித்தி கேள்வி எழுப்பினார்.

தமிழ் மக்களின் வாக்குகளை அரசியல் தீர்வு என்ற நாடகம் மீண்டும் அரங்கேற்றப்பட்டுள்ளது என்றும் அவர் குற்றம் சாட்டினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது,

தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்குவதாக ஜனாதிபதி தெரிவித்திருக்கும் கருத்தானது கண்டனத்திற்குரியதும் அத்தோடு தமிழ் மக்களை ஏமாற்றும் நடவடிக்கையுமாகும்.

திடீரென தமிழ் மக்கள் மீது பாசம் பொங்கி வழிகிறது. தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்குவோம் எனத் தெரிவிக்கும் ஜனாதிபதி ஏன் சிறையில் அடைத்து வைக்கப்பட்டுள்ள அப்பாவி தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்காது தொடர்ந்தும் தடுத்து வைத்துள்ளனர்.

இதனை ஒரு போதும் செய்யமாட்டார்கள். இவர்கள் அனைவரும் யுத்த மானசீக முடையவர்கள் . பெரும்பான்மையென்ற மமதை கொண்டவர்கள். எனவே தமிழ் மக்கள் இந்த ஏமாற்று வித்தைகளுக்கு அடிபணிந்து விடக்கூடாது என்றார். (2-6)

## வரணி சமுர்த்திச்சங்கம் மீண்டும் சொந்த இடத்தில்

இடம்பெயர்ந்து தற்காலிகமாக சாவகச்சேரியில் இயங்கி வந்த வரணி சமுர்த்திச் சங்கம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மீண்டும் தனது பழைய இடத்தில் இயங்கவுள்ளது.

இந்நிகழ்வு தென்மராட்சி பிரதேச செயலர் ஸ்ரீனிவாசன் தலைமையில் நடைபெறவுள்ளது. இதேவேளை கடந்த கால சூழ்நிலைகளால் சேதமான சமுர்த்தி வங்கி கட்டட புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு முடிவுறும் நிலையில் காணப்படுவதால் கட்டடம் பூர்த்தியாக்கப்பட்டதும் வங்கி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-4)

# துப்பாக்கியால் பறிக்கப்படும் அடிப்படை உரிமைகள்

## -கரு ஜயசூரிய-

(கொழும்பு)

நாட்டில் சுதந்திரமாக சென்று திரும்புவதற்குக் கூட முடியாத நிலைமையே ஏற்படுத்தப்பட்டுள்ளது. தாம் விரும்பிய அரசியல் கட்சிக்கு, தாம் விரும்பிய நபருக்கு வாக்களிக்க முடியாத நிலைமையை உருவாக்கியுள்ளது.



ஜனநாயக சமூகம் என்பது மக்களின் அடிப்படை உரிமையாகும். அவர்களின் அடிப்படை உரிமையே துப்பாக்கியினால் இவ்வாறு பறிக்கப்படுகின்றது. என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித்தலைவரும் எம்.பி.யுமான கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித்தேர்தலின் போது பொது வேட்பாளர் சரத் பொன்சேகாவின் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக சென்றுகொண்டிருந்த போது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் குசுமாவதி குருப்பு ஆராய்ச்சி பலியாகியுள்ளார். இந்த சம்பவத்தை வன்மையாக கண்டிக்கின்றோம் என்று அவர் கூறியுள்ளார். அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நிராயுதபாணியாகச் சென்ற வயது முதிர்ந்த பெண்ணே கொலை செய்யப்பட்டிருக்கின்றார் என்றால் அவ்வாறான அரசியலை இந்த நாட்டில் இருந்து விரட்ட வேண்டியது எமது சகலரினதும் பொறுப்பாகும். இந்த துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டவர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த இருவர் என அடையாளம் காணப்பட்டுள்ளது. இவ் இருவரும் அம்பாந்தோட்டையில் கடந்த காலங்களில் அரசியலை மௌனப்படுத்த முயற்சித்த அரசியல்வாதியின் அடியாட்களாவர். அவர்களுக்கு எதிராக பொலிஸார் எவ்வாறான சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கின்றனர் என்பது குறித்து நாம் விழிப்பாக இருக்க வேண்டும். (2-6)

# குமரன் பத்மநாதனின் தற்போதைய நிலை என்ன?

## -ஐ. தே. க. கேள்வி-

(கொழும்பு)

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் சர்வதேச விவகாரப் பொறுப்பாளர் குமரன் பத்மநாதனுக்கு என்ன நேர்ந்ததென ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திடம் கேள்வி எழுப்பியுள்ளதாக தெரிகிறது.

மிகவும் சொகுசான வீடொன்றில் குமரன் பத்மநாதன் தங்கியிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்த நாயக்க தெரிவித்துள்ளார்.

கே.பியுடன் அரசாங்கத்திற்கு இரகசிய உடன்படிக்கைகள் ஏற்பட்டிருக்கலாம் என தமது கட்சி சந்தேகப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது அரசாங்க ஆதரவாளர்கள் புலிகளின் வெளி நாட்டு சொத்துக்களை கைப்பற்ற முயற்சி மேற்கொள்வதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதேவேளை குமரன் பத்மநாதனுக்கு எதிராக அரசாங்கம் ஏன் வழக்குத் தாக்கல் செய்யவில்லை என அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதற்கமைய கே.பி தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் தொடர்பில் அரசாங்கம் விளக்கமளிக்க வேண்டுமென அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (2-6)


## மரண அறிவித்தல்



### திருமதி கைலாசபிள்ளை கண்ணம்மா

புங்குடுதீவு மாரியம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் பிறவுண் வீதி முதலாம் ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட கைலாசபிள்ளை கண்ணம்மா அவர்கள் 13-01-2010 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கைலாசபிள்ளையின் (முன்னாள் வர்த்தகர், பழக்கடை இரத்தினம், யாழ்ப்பாணம் மார்க்கட்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை, தங்கம்மாவின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மருதப்பு வள்ளியம்மையின் மருமகளும் புஸ்பமாலா, சிறிஸ்காந்தன் (சிறி கடை புங்குடுதீவு, புங்குடுதீவு கமநல கேந்திர நிலையம் பெருங்காடு வடக்கு தலைவர், புங்குடுதீவு பத்திரிகை முகவர்), ரஞ்சிதமாலா, சிறிதரன் (பொலிவியா), ஜீவமாலா, சிறிவரதன் (சரண்ஜா கொமினிகேசன் , வரதன் எலக்ரிக்கல் கொன்ரக், கஸ்தூரியார் வீதி), சிறிபாலன் (ஜேர்மனி), ஜெயமாலா ஆகியோரின் அன்புத் தாயாரும் இரத்தினவேல் (அத்தான்), வசந்தா, தர்மசேனன் (தறுமு, திருநெல்வேலி), விஜயலலிதா, தங்கேஸ்வரன் (வயறிங் கனகுகராச), கலாராணி, சீதாலக்ஸ்மி, அருளானந்தம் (பாட்ஷா) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ்சென்ற கண்மணி மற்றும் சின்னம்மா, தம்பையா (கனடா), காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு, பொன்னம்மா, கந் தையா, சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான நாகேசு, விசுவலிங்கம், கனகசபை, முத்துச்சாமி, நல்லதம்பி, துரையப்பா, பரமேஸ்வரி மற்றும் புஸ்பவதி, சற்குணம் ஆகியோரின் மைத்துனியும், சிவதர்சினி - சுரேஸ்குமார் (சிறிலங்கா ரெலிகொம், யாழ்ப்பாணம்), பிரசாந்தி (யாழ். சமூக செயற்பாட்டு மையம் JSAC) கீர்த்திகா (மக்கள் வங்கி கன்னாதிட்டி), சிவகஜனி (FORUT முன்பள்ளி தொண்டர் புங்குடுதீவு), சாரங்கன் (2010 வர்த்தகப் பிரிவு, யாழ். பரியோவான் கல்லூரி), மயூதா உயர் தர மாணவி, யாழ். வேம்படி மகளிர் உயர் தர பாடசாலை), பிரதீசன் (யாழ். மத்திய கல்லூரி), சுகிர்தா (வயம்ப பல்கலைக்கழகம் குளியாப்பிட்டிய), சரண்ஜா, துளசிகா (யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை) அபிநந்தன் (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை), வன்ஜா (ஜேர்மனி), தனுசியன், தர்சிகா (கொக்குவில் இந்துக் கல்லூரி), வேணுகோபன் (யாழ்.மத்திய கல்லூரி), பிரியங்கா (யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் நேகாவின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 15-01-2010 (வெள்ளிக்கிழமை) இன்று முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
கை. சிறிவரதன் (சரண்ஜா கொமினிகேசன்)
கை. சிறிஸ்காந்தன் (சிறி கடை புங்குடுதீவு)

37/24, 1 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 021 222 6882
0777570 103
021 300 1636

(349)


# டெலர் இயந்திரத்தில் வைப்புச் செய்ய கொண்டுவந்த 72 இலட்சம் ரூபா கொள்ளை

(கொழும்பு)

பத்தரமுல்ல பிரதேசத்தில் டெலர் இயந்திரத்தில் வைப்புச் செய்வதற்காக கொண்டுவரப்பட்ட 72 இலட்ச ரூபா பணம் ஆயுத முனையில் இனந்தெரியாத நபர்களினால் கொள்ளையிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பத்தரமுல்ல கல்வி அமைச்சு வளாகத்தில் காணப்படும் டெலர் இயந்திரத்தில் பணத்தை வைப்புச் செய்வதற்காக வங்கி அதிகாரிகள் முனைந்த போதே ஆயுத முனையில் பணம் இவ்வாறு கொள்ளையிடப்பட்டுள்ளது.

மூன்று மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் ஆயுத முனையில் இந்தக் கொள்ளைச் சம்பவத்தை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தில் பத்தரமுல்ல இலங்கை வங்கிக் கிளையின் முகாமையாளர் மற்றொரு அதிகாரி மற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஆகியோரை மிரட்டி பணம் கொள்ளையிடப்பட்டுள்ளது.

மிகவும் நுட்பமான முறையில் திட்டமிடப்பட்டு இந்தக் கொள்ளைச் சம்பவம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் இதுவரையில் கைது செய்யப்பட வில்லை எனக் குறிப்பிடப்படுகிறது. (2-6)


## மரண அறிவித்தல்

சுழிபுரம் பறாளாய் வீதியை வதிவிடமாகக் கொண்ட செல்லம்மா ரீச்சர் காலமாகி விட்டார். அன்னார் காலஞ்சென்ற கந்தசாமியின் மனைவியும் சந்திரா (ஆசிரியர்) , ரஞ்சி( அவுஸ்திரேலியா), மோகன்(அவுஸ்திரேலியா), தாசன் (ஆசிரியர் தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் நாகம்மா ரீச்சர் ,காலஞ்சென்ற ரத்தினவேல் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 09.01.2010 அன்று சிவாபம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள், அவரிடம் கல்விகற்ற மாணவர்கள் அனைவரும் ஏற்றுக்கோள்ளவும்

பறாளாய் வீதி,
சுழிபுரம்.
தொலைபேசி இல: 021 222 5964
021 222 3853

தகவல்
தாசன் (மகன்)
கி.பூபாலசிங்கம் (இளைப்பாறிய தபால் அதிபர்)சகோதரன்.

(348)

# கோபன்ஹேகன் மாநாட்டு தீர்மானம்: இந்தியா மீது அமெரிக்கா நிர்ப்பந்தம்

(புதுடில்லி)

கோபன்ஹேகன் மாநாட்டுத் தீர்மானத்தை ஏற்குமாறு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் கட்டாயப்படுத்தியதாக இந்திய மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்துள்ளார். டில்லியில் உள்ள ஆஸ்பின் மைய விழாவில் பேசுகையில் அவர் இத்தகவலைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது,

கடந்த மாதம் 18 ஆம் திகதி டென்மார்க் தலைநகர் கோபன்ஹேகனில் புவி வெப்பமடைவது குறித்த மாநாட்டில் எவ்வித முடிவும் எட்டப்படக்கூடாது என்று வேண்டுமென்றே ஐரோப்பிய நாடுகள் முட்டுக்கட்டை போட்டன. ஆனால் முடிவு எட்டாததற்கு இந்தியா, சீனா, பிரேஸில் மற்றும் தென்னாபிரிக்கா நாடுகள் தான் காரணம் என்று அமெரிக்கா செய்தியைப் பரப்பியது.

மாநாட்டின் நிறைவு நாளன்று அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா, பங்களாதேஷ் மற்றும் மாலைதீவு பிரதிநிதிகளை அழைத்து இம் மாநாட்டில் தீர்மானம் எட்டுவதற்கு இந்த நான்கு நாடுகள் ஒத்துழைக்காவிடில் உங்களுக்கு எவ்வித நிதியும் கிடைக்காது என்று அச்சுறுத்தும் தொனியல் உறுதிபடத் தெரிவித்தார். இதனால் அந் நாடுகள் மூலம் நான்கு நாடுகளுக்கும் மறைமுக நெருக்குதல் ஏற்படுத்தப்பட்டது.

வளர்ச்சியடைந்த நாடுகளிலிருந்து எவ்வித நிதி உதவியும் பெற வேண்டுமென்றால் அதற்கு ஒப்பந்தம் கையெழுத்தாக வேண்டும். இந்த ஒப்பந்தத்தை நான்கு நாடுகளும் ஏற்றுக்கொண்டாக வேண்டும் என்று அமெரிக்க அதிபர் ஒபாமா தெளிவாகத் தெரிவித்துள்ளார். (2-6)



பிரதோஷத்தை முன்னிட்டு தஞ்சாவூர் பெரிய கோவிலில் மகா நந்தியம் பெருமானுக்கு குடம் குடமாக சந்தன அபிஷேகம் நடந்தது.

# கோரமான முகத்தை அழகாக்கிய சென்னை டாக்டர் எஸ்.பாலாஜி

(சென்னை)

முகம் கோரமாக காட்சி அளித்த வட நாட்டு பெண்ணுக்கு சென்னை டாக்டர் எஸ்.எம். பாலாஜி அறுவை சிகிச்சை செய்து அந்த பெண்ணின் முகம் முழுவதையும் மாற்றி சாதனை புரிந்துள்ளார்.

லக்னோவைச் சேர்ந்தவர் ராஜேஷ் சந்திரா அகர்வால் இவருடைய மகள் ரித்திமா அகர்வால் (வயது25 ). பிசியோ தெரபிஸ்டான இவருக்கு பிறவியிலேயே கண்கள் இரண்டும் முன்னுக்கு தள்ளி இருந்தன. மேல் தாடை சரியாக வளராமல் பின்னால் தள்ளி இருந்தது. இதனால் முகம் கோரமாக காட்சி அளித்தது.

இதைத் தொடர்ந்து அவருக்கு 8 வயதில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. ஆனால் அதில் எந்த வித பயனும் கிடைக்கவில்லை.

இந்த நிலையில் அவருக்கு திருமணம் செய்வதற்காக அவருடைய முகத்தை அழகுபடுத்த பெற்றோர் முடிவு செய்தனர். இதற்காக சென்னை தேனாம்பேட்டையில் உள்ள பாலாஜி பல் மற்றும் முக சீரமைப்பு மருத்துவமனையின் இயக்குனரும் பல் மற்றும் முக சீரமைப்பு நிபுணருமான டாக்டர் எஸ்.எம். பாலாஜியை அணுகினார்கள்.

இதைத்தொடர்ந்து அவர் ரித்திமா அகர்வாலுக்கு அறுவைச் சிகிச்சை செய்து முகத்தை சரி செய்தார். இந்த அறுவைச் சிகிச்சை 7 மணி நேரம் நடந்தது.

இந்த அறுவை சிகிச்சை முடிந்து டாக்டர் பாலாஜி நிருபர்களிடம் நேற்று முன்தினம் கூறியதாவது,

தாயின் வயிற்றில் குழந்தை உருவாகும் போது குறைபாடுகள் காரணமாக எலும்பு இல்லாமல் பல உறுப்புகள் உருவாகும். இதற்கு குருசோன் சின்ட் ரோம் என்று பெயர். அந்த காலத்தில் இதற்கான சிகிச்சைகள் இல்லை.

ஆனால் தற்போது அமெரிக்கா, ஐரோப்பா நாடுகளில் நவீன அறுவைக்கிசிக்சைகள் உள்ளன. அத்தகைய அறுவைச் சிகிச்சையை முதல் முதலாக தமிழ் நாட்டில் எங்கள் மருத்துவமனையில் ரித்திமா அகர்வாலுக்கு வெற்றிகரமாக செய்து முடித்துள்ளோம். தலை முடி முழுவதையும் அகற்றாமல் சிறிதளவு மட்டும் அகற்றி விட்டு முகத்தின் மண்டையோட்டின் வழியாக முகத்தின் தோலை அப்படியே கழற்றினோம்.

2 கண் எலும்புகளை சரி செய்து அதன் தேவைக்கு ஏற்ப கூடுதலாக விலா எலும்பில் இருந்து தலா அரை சென்ரீமீற்றர் அளவுக்கு எடுத்து அவற்றில் இஸ்குரு போட்டு பொருத்தினோம்.

இதனால் அந்த இரண்டு எலும்புகளும் சாதாரண மனிதர்களைப் போல அமைந்து விட்டன. அதைப்போல் தாடை எலும்பையும் அறுவை சிகிச்சை செய்து விலா எலும்பை பொருத்தியுள்ளோம்.

இதன் மூலம் தாடையும் சரி செய்யப்பட்டு விட்டது. இந்த அறுவைச் சிகிச்சையின் காரணமாக முன்னுக்கு தள்ளப்பட்டிருந்த இரண்டு கண்களும் சரியாக அமைந்தன. கோரமாக இருந்த அந்த பெண்ணின் முகம் அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு இயல்பான நிலைக்கு வந்துள்ளது. அவர் இன்று சொந்த ஊருக்குத் திரும்புகிறார். எந்த அறுவைச் சிகிச்சை தமிழ் நாட்டில் முதலாக செய்யப்பட்டுள்ளது என்றார். (2-6)

கொமர்ஷல் வங்கி

# கொமர்ஷல் வங்கி

## ஸ்ரான்லி வீதிக்கிளையின்

## சனிக்கிழமை வங்கிச் சேவை

எமது வாடிக்கையாளர்களுக்கு மேலும் சிறந்த சேவையை வழங்கும் முகமாக எதிர்வரும் 16.01.2010 முதல் பிரதி சனிக்கிழமை தோறும் எமது வங்கிக் கிளை திறந்திருக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வாடிக்கையாளர் சேவை நேரம் 9.00 -1.00

# இந்தியாவில் காங்கிரசின் பொதுத்தேர்தல் வெற்றிக்கு ஜனாதிபதியே உதவினார்

## -லலித் வீரதுங்க-

(கொழும்பு)

இந்தியாவின் பொதுத்தேர்தலில் காங்கிரஸ் கட்சி வெற்றி பெறுவதற்கு இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உதவியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க இந்த கருத்தை ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கடந்த வருடம் இறுதிக்கட்ட யுத்தம் இடம்பெற்றுக்கொண்டிருக்கையில் இந்திய பொதுத்தேர்தலும் இடம்பெற்றது.

இதன் போது தமிழர்கள் கொல்லப்படுவதை இந்தியா நிறுத்த வேண்டும் என்ற அழுத்தங்கள் தமக்கு உலகளாவிய ரீதியில் பிரயோகிக்கப்படுவதாக தெரிவித்த இந்திய காங்கிரஸ் கட்சி அவ்வாறு நிறுத்தாவிட்டால் தமிழகத்தில் உள்ள தமிழர்கள் காங்கிரஸ் கட்சிக்கு வாக்களிக்க மாட்டார்கள் என்ற வாதத்தை முன்வைத்ததாக லலித் வீரதுங்க தெரிவித்துள்ளார்.

எனினும் இதற்கு இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இணங்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இறுதியில் தூரத்தில் இருந்து ஏவக்கூடிய பாரிய ஆயுததாக்குதல்களை மாத்திரம் நிறுத்துவதற்கு ஜனாதிபதி இணங்கினார்.

இந்த நிலையில் இந்திய தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு தமிழக வாக்காளர்களின் வாக்குகள் கிடைத்ததாக தெரிவித்துள்ள லலித் வீரதுங்க மஹிந்த ராஜபக்ஷவின் உதவியினால் இந்திய காங்கிரஸ் கட்சி தேர்தலில் வெற்றிப்பெற்றதாக கூறியுள்ளார்.

இதேவேளை பிரித்தானியா வெளியுறவு அமைச்சர் டேவிட் மிலிபாண்ட் மற்றும் பிரான்ஸின் வெளியுறவு அமைச்சர் பேனாட் குச்சனர் ஆகியோர் ஜனாதிபதியிடம் இந்தப் போரை நிறுத்துமாறு கேட்டுக்கொண்டபோது அதற்கு இணங்காத மஹிந்த ராஜபக்ஷ இலங்கை எந்த ஒரு நாட்டினதும் குடியேற்ற நாடு அல்ல என தெரிவித்ததாக லலித் வீரதுங்க குறிப்பிட்டுள்ளார்.



பயங்கரவாதத்தை ஒழிக்காமல் தாம் இருக்கப் போவதில்லை எனத் தெரிவித்த ஜனாதிபதி தம்மை தெரிவு செய்த மக்களுக்கு தாம் பொறுப்புக்கூற கடமைப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டதாக லலித் வீரதுங்க தெரிவித் துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் செயலாளராக இருப்பதில் பெருமிதம் கொள்வதாக தெரிவித்துள்ள அவர் அவரின் ஆலோசனையின் அடிப்படையிலேயே யுத்தத்தில் வெற்றிபெற முடிந்ததாக குறிப்பிட்ட அவர் முன்னாள் இராணுவத் தளபதியும் தற்போதைய ஜனாதிபதி வேட்பாளருமான சரத்பொன் சேகாவின் பங்களிப்புக் குறித்த கேள்விக்கு எவ்வித பதிலையும் வழங்கவில்லை எனத் தெரிகிறது. (2-6)

## கொழும்பு - யாழ்.தனியார் பஸ்சேவையை அனுமதிக்க மீண்டும் கோரிக்கை

(கொழும்பு)

கொழும்பு - யாழ்ப்பாண தனியார் பஸ் போக்குவரத்தினை ஆரம்பிப்பதற்கு அனுமதியளிக்குமாறு அரசாங்கத்திடம் மீண்டும் கோரிக்கை விடுப்பதாக தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன தெரிவித்துள்ளார்.

இத்தகைய போக்குவரத்திற்கு அனுமதியளிக்குமாறு கடந்த டிசம்பர் மாதம் 28 ஆம் திகதி அரசாங்கத்திற்கு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அரசியல்வாதிகள் மற்றும்பத்திரிகை நிறுவனங்களுக்குச் சொந்தமான பஸ்கள் வீதிப்போக்குவரத்து அனுமதியின்றி யாழ்.- கொழும்பு பஸ்சேவையை நடத்தி வரு வதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (2-6)

## ஹைகோர்ப் மோசடி குற்றச்சாட்டுக்கள் உண்மைக்குப் புறம்பானவை - மங்கள சமரவீர

(கொழும்பு)



ஹைகோர்ப் ஆயுத மோசடியில் ஈடுபட்டதாக ஜெனரல் சரத் பொன்சேகா மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளில் உண்மையில்லை என சிறிலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் தலைவர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகா மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் திரிபுபடுத்தப்பட்டவை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சில அரசாங்க அதிகாரிகளுக்கும் இந்தக் குற்றச்சாட்டுக் களுக்கும் நேரடித் தொடர்பு இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஹைகோர்ப் பிறைவேற் லிமிட்டட் மற்றும் ஹைகோர்ப் இன் டர் நெசனல் ஆகியன இரு வேறு நிறுவனங்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஹைகோர்ப் பிறைவேட் லிமிட்டெட் இலங்கையைச் சேர்ந்த நிறுவனம் எனவும் ஹைகோர்ப் இன்டர்நெசனல் அமெரிக்காவில் கூட்டிணைக்கப்பட்ட ஓர் நிறுவனம் எனவும் ஹைகோர்ப் இன்டர் நெசனல் நிறுவனம் பாதுகாப்பு அமைச்சில் பதிவு செய்யப்படவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜெனரல் சரத் பொன்சேகாவின் மருமகன் தானுக திலகரட்ன இந்த நிறுவனத்தின் பணிப்பாளர் மட்டுமே என குறிப்பிட்ட அவர் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு எதிரான போலியான குற்றச்சாட்டுக்களை சுமத்துவதற்கு சிலருக்கு பணம் செலுத்தப்பட்டு வருவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (2-6)

## இலங்கை அகதி கைது

(கொழும்பு)

கிளிநொச்சியைச் சேர்ந்த முத்துக்கிருஸ்ணன் வயது 32 என்பவர் நேற்று முன்தினம் பாம்பன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இது குறித்து தெரியவருவதாவது,

குறித்த நபர் கடந்த மாதம் 5ஆம் திகதி பாம்பன் பொலிஸ் நிலையத்தில் அகதியாக பதிவு செய்யவந்தார்.

பொலிஸார் விசாரித்து மண்டப அகதிகள் முகாம் அனுப்பி வைத்தனர். இவர் மீது சந்தேகம் அடைந்த கியூபிரிவு பொலிஸார் சிறப்பு முகாமுக்குக்கொண்டு சென்று விசாரித்தனர்.

விசாரணையில் அவுஸ்திரேலிய குடியுரிமை பெற்ற இவர் திருட்டுத்தனமாக கோடியாக்கடற்கரை பகுதியில் வந்திறங்கி அங்கிருந்து சென்னை சென்றதும் பின் பாம்பன் வந்து அகதியாக பதிவு செய்தது தெரிய வந்தது.இவரை பாம்பன் பொலிஸார் கடவுச் சீட்டு சட்டத்தில் நேற்று முன்தினம் கைது செய்து சிறையில் அடைத்தனர். (6)

## யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் விலங்கு விசர்நோயை தடுப்பதற்காக ஆண், பெண் நாய்களுக்கான கருத்தடை சிகிச்சை திட்டத்திற்கான கேள்வி விண்ணப்பம் கோரல்-2010

ஆண்,பெண் நாய்களிற்கான கருத்தடை சத்திர சிகிச்சையினை மேற்கொள்வதற்கு வேண்டிய தகைமைகள்

01. சத்திர சிகிச்சை கால்நடை வைத்திய அதிகாரியை தெரிவு செய்தல்.
    - i. அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட கால்நடை வைத்தியராக இருத்தல் வேண்டும்.
    - ii. . அவரது குழுவில் மிருக வைத்திய உத்தியோகத்தர்கள், மிருக வைத்திய உதவியாளர்கள் அடங்கப்படவேண்டும்.
    - iii. யாழ். மாவட்டத்தில் எப்பகுதியிலும் சத்திர சிசிச்சை மேற்கொள்ளத் தயாராக இருத்தல் வேண்டும். (இடவசதி ஒழுங்குகள் திணைக்களத்தால் தெரிவு செய்யப்படும்)
    - iv. சத்திர சிகிச்சை நிபந்தனைகள் பின்பற்றப்படவேண்டும்.
    - v. போக்குவரத்து செலவுகள் , உதவியாளர்களிற்கான செலவுகள், உணவு, சிற்றுண்டி செலவுகள் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படமாட்டாது.
    - vi. பெண் நாய்களின் சூலகமும் கற்பப்பையும் அகற்றி விடும் சத்திர சிகிச்சைக்குட்படுத்தல் வேண்டும்.
    - vii. கருத்தடை சத்திர சிகிச்சைக்கு உட்படுத்திய நாய்களை அறிந்து கொள்வதற்காக வலது பக்க காதின் மேற்சோணையில் V உருவத்தில் குறியீடு இடப்படல் அல்லது பச்சை குத்துதல் (Tattooing and photographic system) வேண்டும்.
    - viii. சத்திர சிகிச்சையின் பின்பு நாய் மயக்க நிலையிலிருந்து விடுபடல் வேண்டும்.

    இது தொடர்பான மேலதிக விவரங்களையும் கேள்விப்பத்திரங்களையும் இவ்வலுவலகத்தில் வேலை நேரத்தில் 20.01.2010 திகதிக்கு முன் பெற்று 30.01.2010 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்க வேண்டும்.கேள்விப்பத்திரங்கள் 10.02.2010 காலை 10.00மணிக்கு திறக்கப்படும்.

02. கட்டாக்காலி ஆண், பெண் நாய்களை கருத்தடை சிகிச்சைக்காக உயிருடன் பிடிப்பதற்கான விண்ணப்பம்.
    - i. அண்மையில் நடைபெறும் சிகிச்சை நிலையத்திற்கு உயிருடன் பிடித்து வருதல் வேண்டும்.
    - ii. சிகிச்சையின் போது கால்நடை வைத்தியதிகாரிக்கு உதவுதல்
    - iii. சிகிச்சை முடிவடைந்து மயக்கம் தெளிந்த பின்னர் அதே இடத்தில் மீண்டும் விட்டுவிடல்.

    விண்ணப்ப பத்திரம் கீழ் கண்டவாறு தயார் செய்து 30 .01.2010 ஆம் திகதிக்கு முதல் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.10.02.2010 காலை 10.00மணிக்கு திறக்கப்படும்.

**விண்ணப்பப்படிவம்**

1. முழுப்பெயர்
2. முகவரி
3. பால்
4. வயது
5. நிரந்தர வதிவிடம்
6. கோரப்படும் தொகை (நாய் ஒன்றுக்கு)
7. கையொப்பமும் திகதியும்

**வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்**
**பிராந்திய சுகாதார பணிப்பாளர்,**
**யாழ்ப்பாணம்.**

(சி/4225)

# உங்கள் கணனியின் பாதுகாப்பு




### அண்ட்டி வைரஸ் (Anti Virus)

அப்ளிகேஷன் சொப்ட்வெயர் இன்றைய அளவில் கிடைத்துள்ள வைரஸ் புரோகிராம்களில் காணப்படும் சிக்னேச்சர் என்னும் கோடிங் முறையின் அடிப்படையில், ஹார்ட் டிஸ்க்கினை ஸ்கேன் செய்து, அதில் ஏதேனும் வைரஸ், ட்ரோஜன், வோர்ம் ஆகியன இருந்தால், அந்த புரோகிராம்களைக் கண்டறிந்து அழிக்கும். அல்லது குவாரண்டைன் என்னும் தனி இடத்திற்கு அனுப்பும். நமக்கும் எச்சரிக்கை கொடுக்கும். நீக்கமுடியவில்லை என்றால், ஹார்ட் டிஸ்க்கில் இருக்கும் இடத்தை காட்டி எச்சரிக்கை செய்திடும்.

### அட்டாக் (Attack)

நம் அனுமதி பெறாத ஒரு நபர் அல்லது ஒரு புரோகிராம், நம் கணனியை தன் கட்டுப்பாட்டில், பல்வேறு காரண காரியங்களுக்காகக் கொண்டு வரும் செயல்பாடு.

### பக் டோர் (Back Door)

இதனைச் சில சமயங்களில் ட்ரேப் டோர் (Trap Door) எனவும் அழைக்கின்றனர். அப்ளிகேஷன் புரோகிராமில், புரோகிராமை வடிவமைத்தவரால் அமைக்கப்படும் வழி.

புரோகிராமில் ஏதேனும் பிழை இருந்தால், இந்த வழியாக புரோகிராமின் வரிகளை அடைந்து செப்பனிடுவார். ஆனால் இது போன்ற வழி இருப்பது அடுத்தவருக்குத் தெரிந்தால், புரோகிராம் செயல்படும் தன்மையையே அவர் மாற்றிவிடலாம்.

### பயர்வோல் (Fire wall)

இது ஒரு சொப்ட்வெயர் அல்லது ஹார்ட்வெயர். இன்டர்நெட் அல்லது நெட்வொர்க் மூலமாக அனுமதியின்றி உங்கள் கணனிக்குள் வரும் புரோகிராமினை தடுத்து நிறுத்தும். உங்களுக்கு எச்சரிக்கை தரும். சிலவேளைகளில் உங்கள் அனுமதியைப் பெற்று அந்தப் புரோகிராமினை அப்போதும் அடுத்து வருகையிலும் அனுமதிக்கும்.

### ஹைஜாக்கிங் (Hijacking)

கணனியின் செயல்பாட்டில் குறுக்கீடுசெய்து, இயக்கத்தினை முடக்குவது, கணனி பயன்படுத்திக் கொண்டிருக்கும் நீங்கள், சற்று வெளியே செல்கையில், கணனியைக் கைப்பற்றி பயன்படுத்துவதனையும் இந்த வகையில் சேர்க்கலாம். அடுத்த வகை இன்டர்நெட் வழியாக நுழைந்து கணனியில் இயக்கத்தைத் தன் கையில் எடுத்துக்கொள்வது.

### ஹோல் (Hole)

உங்கள் சிஸ்டத்தினை பலவீனமான ஓர் இடம். உங்கள் சிஸ்டம் அல்லது அப்ளிகேஷன் சொப்ட்வெயரில் இருக்கலாம். இதன் வழியாக உங்கள் அனுமதியின்றி ஒருவர் அனுப்பியுள்ள புரோகிரம், கணனிக்கு உள்ளே வரலாம்.

### எச்.டி.டி.ப்பி.எஸ். (HTTPS Hypertext Transfer Protocol Secure)

இணையத்தில் உள்ள புரோட்டோகால் அம்சங்களில் இது எச்.டி.டி.பியில் ஒருவகை. தனித்தன்மை கொண்ட, தனி நபர் அல்லது நிறுவனங்களை சார்ந்த முக்கிய தகவல்கள் பரிமாறப்படும் தளங்களில் இந்த வகை புரோட்டோகால் வகை அமைக்கப்படும்.

### கீ (Key)

விண்டோஸ் ரெஜிஸ்ட்ரியில் விண்டோஸில் அமைக்கப்படும் செட்டிங்ஸ் சரியாக அமைந்திட உதவுபவற்றை இப்படிக் குறிப்பிடுவார்கள். புரோகிராம் ஒன்று கணனியில் நிறுவப்படும்போதும், நீக்கப்படும் போதும் இந்த கீகள் மாறப்படும்.

உங்கள் கணனியில் வைரஸ் நுழைந்து இந்த கீகளில் உங்கள் அனுமதி யின்றி மாற்றங்கள் செய்திட் டால், கணனி இயக்கம் பிரச்சினைக்குள்ளாகும்.




### கீ லொக்காஸ் (Keyloggers)

அடிப்படையில் இது புரோகிராம் ஒன்றில் கீகளின் அழுத்தம் பயன்பாட்டிற்காகப் பதியப்படுவதனைக் குறிக்கும்.

ஆனால் இப்போதோ, கெடுதல் விளைவிக்க எண்ணும் நபர்கள், கணனி ஒன்றில் அழுத்தப்படும் கீகளைப் பதிவு செய்திட ஸ்பைவெயர் அதன் அடிப்படையில் இரகசியமான தகவல்களைப் (பாஸ்வேர்ட் போன்ற) பெற்று, பின் அவற்றைப் பயன்படுத்தி நாசம் விளைவிக்கும் எண்ணத்தில் இதனைப் பயன்படுத்துகின்றனர்.

@mm வைரஸ் ஒன்றில் இறுதியில் இந்த அடையாளம் காணப்படும். எடுத்துக்காட்டாக W32netsky@mm. இந்த அடையாளம் மாஸ் மெயிலார் என்பதைக் குறிக்கிறது. மாஸ் மெயிலர் என்பது வைரஸ் ஒன்றின் பெயர். இதனால் பாதிக்கப்படும் கணனியில் உள்ள ஹார்ட் டிஸ்க்கின் பல பகுதிகளிலிருந்து, மின்னஞ்சல் முகவரிகளைப் பெற்று, அவை அனைத்துக்கும் தன் செய்தி அஞ்சலை அனுப்பும். பின் அனுப்பப்பட்ட கணனிகளில் பரவும். சிலவற்றில் ஒரு எம். (m) மட்டும் காணப்படும். அது மெயிலர் என்பதை மட்டும் குறிக்கிறது. இந்த வகை மெயிலர் வைரஸ் தான் பரவுவதற்கு ஒரு இமெயிலின் துணையைக் கொள்ளும்.

### பே லோட் (Pay Load)

இது வைரஸ் ஒன்றின் பகுதியாகும். இது எப்போதும் அழிவைத் தரும் செயல்களில் இறங்காது; ஆனால் தேவையில்லாத ஒன்றாகும்.

### ரெப்ளிகேஷன் (Replication)

பேர்சனல் கணனி ஒன்றை ஒரு வைரஸ் பாதித்தவுடன், அது தன்னையே கொப்பி செய்துகொள்ளும் பணியில் இறங்கும். பின் அந்தக் கணனி மற்றப் பாகங்களையும் பாதிக்கும். இமெயில் முகவரிகள் மூலமாக மற்ற கணனிகளையும் பாதிக்கும். அடுத்த கணனியை அடைத்தவுடன் நூற்றுக்கணக்கான கணனிகளில் பரவி கெடுதல் வேலையை நடத்தும். தன்னைத்தானே கொப்பி செய்திடும் வேலையை இந்த சொல் குறிக்கிறது.

### வேரியன்ட் (Variant)

வைரஸ் புரோகிரம் ஒன்றில், ஒரிஜினல் வைரஸ் புரோகிராம் வரிகளைப் போன்று அமைக்கப்படுபவை இப்படிக் குறிக்கப்படுகின்றன. இவற்றின் மூலம் அண்ட்டி வைரஸ் தொகுப்புக்களின் பணியைத் திசை திருப்பும் வேலையை இவை மேற்கொள்கின்றன.

### வைரஸ் டெபனிஷன்ஸ் பைல் (Virus Definition File)

அண்டி வைரஸ் புரோகிராம்களால் பயன்படுத்தப்படும் டேட்டா பைல்களாகும். இவற்றின்மூலம் தான் ஏற்கனவே உலவி வரும் வைரஸ் புரோகிராம்கள் கண்டறியப்படுகின்றன.

# வர இருக்கும் தொழில்நுட்ப மாற்றங்கள்

அடுத்த 10 ஆண்டுகளில் கணனியின் என்ன மாற்றங்கள் வரும் என இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சியின் அடிப்படையில் கணித்த சில எதிர்பார்ப்புகளை இங்கு காணலாம்.



◆ அதிக இடத்தை எடுத்துக்கொண்டு, மெதுவாகவும், சூடாகவும் இயங்கும் சிலிகான் நீக்கப்படும். கணனியில் புதிய கட்டமைப்பில் குறை வான அளவில் எலக்ட்ரோன் களும் அதிக அளவில் ஒப்டிகல் இழைகளும் பயன்படுத்தப்படும். ஒப்டிகல் கணனிகள் வரும் நாள் வெகு தொலைவில் இல்லை.

◆ கணனிகள் திருட்டுப்போகாது. பயோமெட்ரிக் பயன்பாடு பரவலாகி, கைரேகைகளுக்கு மட்டுமே கணனியின் கதவு திறக்கும்.

◆ கீ போர்ட்டுகள் ஓரம் கட்டப்படும். டச் ஸ்கிரீன் இப்போதே வந்துவிட்டது. இனி சைகைமுலம் நாம் கணனியையும் சொப்ட்வெயர் அப்ளிகேஷனையும் இயக்கலாம். அடுத்ததாக நம் குரல் மூலமே அனைத்தையும் இயக்கும் வழிகள் கண்டறியப்படும்.

◆ கணனிகள் கையடக்க சாதனமாக மாறும். அலுவலகத்தில் டெஸ்க்குகளில் உள்ள இணைப்புக்களில் இணைத்த பின்னர், டொப்பில் உள்ள பெரிய திரைகளில் கணனி இயங்குவதைப் பார்க்கலாம். எனவே டெஸ்க்டொப் கணனி இனி டெஸ்க்கில் உள்ள டொப் கணனியில் இயங்கும்.

◆ வீடுகளில் உள்ள கணனிகள் நமக்காக, நம் பேர்சனல் தேவைக்காக இயங்கும். நாம் அலுவலக்திலிருந்து வந்தவுடன் நம்மை ஓய்வெடுக்கச் சொல்லி, நமக்காக சாதனங்களை இயக்கும்.

◆ டிவிடிக்கள் பல டெராபைட்டுக்கள் கொள்ளளவினைக் கொண்டிருக்கும். பிளாஸ்டிக் பிளாட்டர் படுவேகத்தில் சுழலும். ஹோலோ கிராபிக் தொழில்நுட்பத்தில் எழுதுவதற்கு ஒரு பக்கத்தில் ஒரு லேசரும், இன்னொரு பக்கத்தில் இன்னொன்றாக இயங்கும்.

◆ இப்போதிருக்கும் சிபியு அப்படியே இருக்கும். ஆனால் எலக்ட்ரோனிக் மைக்ரோ புரோசருக்குப் பதிலாக ஒப்டோ எலக்ட்ரோனிக் இண்டக்ரேய்டட் சர்க்யூட் அமைக்கப்படும். இதனை ஸ்விட்ச் ஒன் செய்திட சிலிகன் இருக்கும். ஆனால் மற்ற இயக்க வேலைகளை ஒப்டிக்கஸ் பார்த்துக் கொள்ளும். தற்போது கிடைக்கும் இயக்க வேகத்தினைக் காட்டிலும் 100 மடங்கு அதிக வேகத்தில் சிபியு இயங்கும்.

◆ இனி ரம்மெமரி ஹோலோகிராபிக்ஆக இருக்கும். இது முப்பரிமாணம் உடையதால், எத்தனை அடுக்குகளையும் இது கொள்ளும். எனவே கொள்ளளவு கற்பனையில் எண்ண முடியாத அளவில் அமையும்.

◆ இன்டெல் நிறுவனத்தின் கோர் ஐ3 மற்றும் கோர் ஐ5 சிப்கள், 2010 ஆம்ஆண்டில் பெரும் அளவில் கணனிகளை இயக்கும்.

◆ இன்டர்நெட் டிவி புழக்கம், கணனியுடன் இணைக்கப்படும் டி.வி. ஸ்மார்ட் போல பலமொனிட்டர்களுடன் இயங்கும் கணனி, புளூரே டிவிடி, விண்டோஸ் 7 தரும் முழுப் பயன்பாடு, டர்போ பூஸ்ட் தொழில்நுட்பம், நம் வேலைகளுக்கேற்ப இயக்க வேகத்தை மாற்றிக்கொள்ளும சிப் என வரும் 2010 ஆம் ஆண்டு அமர்க்களப்படப் போகிறது.

# பயனுள்ள தகவல்கள் தரும் பாதுகாப்பான தளம்

அண்மையில் இணையத்தில் உலா வந்தபோது பார்த்த ஒரு தளத்தின் மீது நான் தீராத ஆசைகொள்ளும் அளவிற்கு அது என்னைக் கவர்ந்தது. கணனி உலகில் பல டிப்ஸ்களை மட்டுமின்றி, பல பயனுள்ள தகவல்களையும் அது தந்தது.

மேலும் நம்மை உற்சாகப்படுத்த கேம்ஸ்கள் பலவற்றையும் அது கொண்டுள்ளது. இந்தத் தளத்தின் முகவரி: http:/www.safesurfer.org/ இந்தத் தளம் பல பிரிவுகளைக் கொண்டு அழகாக நம்மைக் கவரும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

இங்கு சென்றவுடன் தளம் அமையும் விதம் பாராட்டத் தக்கதாய் அமைகிறது. இதன் பிரிவுகளைப் பார்க்கலாம்.

Forum: இதில் இந்தத் தளத்தைக் காண வருபவர்கள் கூறும் கருத்துக்களைப் படிக்கலாம். நீங்களும் உங்கள் கருத்தை எழுதவேண்டும் என எண்ணினால், இதில் பதிந்து கொள்ளவேண்டும். அதற்கு எந்த நிபந்தனையும் இல்லை என்பதால், இந்தத் தளம் வரும் அனைவரும் இதில் தங்களைப் பதிந்துகொள்வார்கள்.

### இந்தவார இணையத்தளம்

Blog: நாம் சில கருத்துக்களை பைசாவுக்கு புண்ணியம் இல்லாதது என்று வேடிக்கையாகவும் (சில வேளைகளில் சீரியசாகவும்) கூறுவோம் அல்லவா! அது போல்தான் இதுவும். இங்கு நீங்களும் உங்களைப்பதிந்து கொண்டு எழுதலாம். டிப்ஸ், ட்ரிக்ஸ் மற்றும் கணனி, இன்டர்நெட் குறித்த தலைப்புக்களில் தகவல்கள் ஆகியவற்றைத் தரலாம்.

The Buzz: இந்த ப்பிரிவில் நாம் ஆர்வம்கொண்டுள்ள பல தலைப்புகளில் அண்மைக்காலத்திய செய்திகளையும் தகவல்களையும் படிக்கலாம். ஸ்போர்ட்ஸ், சயின்ஸ், உடல் நலம், தொழில்நுட்பம் எனப் பல பிரிவுகளில் தகவல்கள் கிடைக்கின்றன.

Lingo: இன்டர்நெட் குறித்த ஸ்லாங் என்னும் வழக்குச் சொற்கள் மற்றும் சுருக்கச் சொற்களைக் காணலாம். மேலே உள்ள ஆங்கில எழுத்துக்கள் வரிசையில் உள்ள எழுத்து ஒன்றில் அழுத்தினால், அந்த எழுத்தில் தொடங்கும் சொற்கள் குறித்த விளக்கங்கள் கிடைக்கும். அல்லது ஸ்குரோல் செய்து கீழாக இதன் பக்கங்களைக் காணலாம்.

Tips'n'Trix: நான் அதிகம் விரும்பும் பிரிவு. கணனி மற்றும் இன்டர்நெட் குறித்த பல டிப்ஸ் மற்றும் டிரிக்ஸ் இந்தப் பிரிவில் தரப்படுகிறது. அது மட்டுமன்றி நீங்கள் கட்டாயம் சென்று பார்க்க வேண்டிய தளங்கள் என்று ஒரு பட்டியல் காட்டப்படுகிறது. பிரிவுளுடன் இன்னும் சிலபயனுள்ள பிரிவுகள் உள்ளன.

# தை மாதப் பலன்கள்



## மேடம்

**(அச்சுவினி, பரணி, கார்த் திகை - முதலாம் பாதம் வரை)**

வைராக்கியத்தோடு செயல்பட்டு வருங்காலத்தை நலமாக்கிக் கொள்ளும் மேட ராசி நேயர்களே!

தை மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்திலேயே இராசிநாதன் செவ்வாய் வக்ரம் பெற்றும், நீச்சம் பெற்றும் சஞ்சரிக்கிறார். இன்னும் ஐம்பத்து ஒன்பது நாட்களுக்கு இதே நிலைமைதான்.

அத்துடன் தொழில் இலாபாதிபதியாக விளங்கும் சனியும் வக்ரம் பெற்று சஞ்சரிக் கிறார். எனவே, தொழில் செய்பவர்களுக்கு பணம் வருவதற்கு முன்னதாகவே செலவுகள் வந்து நிற்கும்.

உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு உழைப்பு அதிகமாக இருக்கும். "இக்கரைக்கு அக்கரை பச்சை" என்ற பழமொழிப்படி இந்த வேலையைக் காட்டிலும், அந்த வேலை நன்றாக இருக்குமோ என்று நீங்கள் நினைப்பீர்கள். ஆனால், எங்கு சென்றாலும் வேலைப்பளு கூடுதலாகவே இருக்கும். எனவே, இருக்கும் இடத்திலேயே இருப்பது நல்லது.

வீடு மாற்றங்களும், வீட்டு பராமரிப்புச் செலவுகளும் ஏற்படும் மாதமிது. அலைச்சல் கூடி ஆதாயம் குறையும் இந்த நேரத்தில் அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்க அங்காரகனை வழிபட்டு வருவது நல்லது. குரு இலாபஸ் தானத்தில் இருப்பதால், பணக்கவலை ஏற்படாது.

மூன்றில் உள்ள கேது சகோதர வழியில் பிரச்சினைகளைச் சந்திக்க வைக்கலாம். அவர்களை அனுசரித்துச் செல்வதன் மூலம் இனிய பலன்களை நீங்கள் எதிர்பார்க்கலாம்.

ஜனவரி 15 ஆம் திகதி மகர ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கிறார். 2,7 க்கு அதிபதியான சுக்ரன் 10 இல் சஞ்சரிக்கும் பொழுது பணத்தேவைகள் பூர்த்தியாகும். தொழில் பங்குதாரர்கள் விலகினாலும் புதியவர்கள் வந்திணைவர்.

எனவே, நடக்கும் தொழிலில் இருந்த தடை அகல, புதியவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

பெண் தெய்வ வழிபாட்டில் ஈடுபாடு செலுத்துவது நல்லது. பெண் வழி பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். தங்கம், வெள்ளி போன்றவைகள் மற்றும் பூர்வீக சொத்துக்களால் இலாபம் கிடைத்து மகிழும் வாய்ப்பு கிட்டும்.

பெப்ரவரி 2 ஆம் திகதி புதன் மகர ராசியில் சஞ்சரிக்கப் போகிறார். 3,6 க்கு அதிபதி 10 இல் சஞ்சரிப்பதால் தொழிலுக்காக அரசு அல்லது தனியார் துறையில் கேட்ட கடன் உதவி கிடைத்து மகிழ்வீர்கள். எதிரிகள் விலகும் நேரமிது.

மதிப்பும், மரியாதையும் உயரும். உடல் நலத்தில் ஏற்பட்ட பாதிப்புகள் அகலும். உற்சாகமும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். பம்பரமாய் சுழன்று பணிபுரிவீர்கள்.

பெப்ரவரி 7 ஆம் திகதி கும்ப ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக வளர்ச்சி கூடும். ஆடை, ஆபரணச் சேர்க்கை அதிகரிக்கும்.

கரைந்த சேமிப்புக்களை ஈடுகட்டுவீர்கள். கல்யாணக் கனவுகள் நனவாகும். வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள வசதி வாய்ப்புகள் வந்து சேரும். நட்பால் நல்ல காரியமொன்று நடைபெறும்.

இம்மாதம் இனிய மாதமாக அமைய அருகில் இருக்கும் சிவாலயத்துக்குச் சென்று முருகப் பெருமானை வழிபட்டு வருவது நல்லது. செவ்வாய் விரதம் செழிப்பை வழங்கும்.



## இடபம்

**(கார்த்திகை 2, 3,4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம், 1,2 ஆம் பாதங்கள் வரை)**

வேகத்தோடும், விவேகத்தோடும் செயல்பட்டு வெற்றி காணும் இடப ராசி நேயர்களே!

தை மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது,மாதத் தொடக்கத்திலேயே மாற்றங்கள் வருவதற்கான சூழ்நிலை தென்படுகிறது.

விரயாதிபதி வக்ரம் பெறுவது யோகம் தான். அதே நேரத்தில் களத்திர ஸ்தானாதிபதியுஂ வக்ரம் பெறுவதால் களத்திரத்துடன் அனுசரித்துச் செல்வது நல்லது. அப்பொழுது தான் குடும்ப ஒற்றுமை கூடும்.

அஷ்டம ஸ்தானத்தில் நான்கு கிரகங்கள் வலுப்பெறுவதால் எதிர்பார்த்த மாற்றம் வருமா? வராதா? என்ற கவலை மேலோங்கும்.

தெசாபுத்தி பலம் பெற்றவர்கள் பத்தாமிடத்தில் இருக்கும் கேதுவைப் பற்றி கவலைப்பட வேண்டாம்.

வீடு மாற்றம், இடமாற்றம், உத்தியோக மாற்றம், தொழில் மாற்றம் என்று வரும் மாற்றங்களை ஆராய்ந்து தேர்ந்தெடுத்துக் கொள்வது நல்லது. உடனிருப்பவர்களின் ஒத்துழைப்பு கிடைக்க விட்டுக் கொடுத்துச் செல்லும் சூழ்நிலை உருவாகலாம்.

யோகாதிபதி சனி வக்ரம் பெறுவதால், சனிக்குரிய வழிபாடுகளை முறையாக மேற்கொள்வதோடு, அனுமன் வழிபாட்டையும், நந்தி வழிபாட்டையும் மேற்கொண்டால் இனிய பலன்கள் எந்த நாளும் நடைபெறும்.

ஜனவரி 15 ஆம் திகதி மகர ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கிறார். இராசிநாதன் ஒன்பதில் சஞ்சரிக்கும் பொழுது முன்னோர் வழி சொத்துக்களில் முறையான பலன் கிடைக்கும். பாகப்பிரிவினைகள் சுமூகமாகும்.

பங்காளிப்பகை மாறும். நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்ளும் வாய்ப்பு ஒரு சிலருக்கு கிட்டும்.

நீடித்த நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள். பெண் வழியில் எதிர்பாராத வரவு ஒன்று வந்து சேரும். கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டுவீர்கள். பதவி உயர்வு, ஊதிய உயர்வு போன்றவைகள் எதிர்பார்த்தபடியே வந்து சேரும். பெப்ரவரி 2 ஆம் திகதி மகர ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். 2,5 க்கு அதிபதி 9 இல் சஞ்சரிக்கும் பொழுது வரவு திருப்தி தரும். வளர்ச்சி கூடும். தடைப்பட்ட காரியங்கள் தானாக நடைபெறும்.

காதனி விழாக்கள் முதல் கடைத்திறப்பு விழாக்கள் வரை கலந்து கொண்டு மகிழ்ச்சியடைவீர்கள். விஷ்ணு வழிபாடு இக்காலத்தில் உங்கள் விருப்பங்களை நிறைவேற்றும்.

**சிவல்புரி சிங்காரம்**

பெப்ரவரி 7 ஆம் திகதி கும்ப ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். இராசிநாதன் 10இல் சஞ்சரிக்கும் பொழுது செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடும் வாய்ப்பு கிட்டும். சென்ற மாதத்தில் நடைபெறாத சில காரியங்கள் இப்பொழுது நடைபெறத் தொடங்கும். நண்பர்கள் வருமானத்திற்கு வழிவகுத்துக் கொடுப்பர். குருவின் பார்வை பலம் கூடுவதால், திருமண முயற்சி வெற்றி பெறும்.

இம்மாதம் எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்க நந்தீஸ்வரர் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். பிரதோஷ விரதம் பெருமை சேர்க்கும். (தொடரும்)

---

### மோதல் காரணமாக

## அங்கவீனமுற்றோருக்கென அரசாங்கத்தின் விசேட திட்டங்கள்

(கொழும்பு)

மோதல் காரணமாக அங்கவீனமுற்றவர்களின் நலன்களைப் பெறுவதற்கு அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது. மஹிந்த சிந்தனை தொலைநோக்குத் திட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள திட்டங்களை அமுல்படுத்துவதன் மூலம் அவர்களுக்கு சிறந்த எதிர்காலமொன்றை ஏற்படுத்த முடியும் என அங்கவீனர்களுக்கான தேசிய செயலகப் பணிப்பாளர் எம்.டி.சி ஜெயமான்ன தெரிவித்தார்.

அங்கவீனமுற்றவர்களுக்கு இத் திட்டத்தின் கீழ் 3 ஆயிரம் ரூபா மாதாந்தக் கொடுப்பனவு மற்றும் சக்கர நாற்காலி என்பனவும் வழங்கப்பட்டு வருகின்றது. தற்பொழுது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள அங்கவீனமுற்றவர்களுக்கு இந்தக் கொடுப்பனவு வழங்கப்படுவதாக ஜெயமான்ன கூறினார்.

இதில் புனர்வாழ்வு பெற்றுவரும் முன்னாள் புலி உறுப்பினர்களில் அங்கவீனமடைந்து ஆயிரத்து 420 பேர் வவுனியா புனர்வாழ்வு நிலையங்களில் தங்கவைக்கப் பட்டிருந்தனர்.

இவர்களில் கைகால்கள் இழந்தவர்களுக்கு செயற்கைக் கால்கள், கைகள் என்பன வழங்கப்பட்டுள்ளதோடு வயது குறைந்தவர்களை அங்கவீனர்களுக்கான பாடசாலைகளுக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் தயா ரத்னாயக்க தெரிவித்தார்.

இதற்காக அங்கவீனமுற்ற புலிகள் இயக்க முன்னாள் உறுப்பினர்களின் நலன்களை ஆராய நிபுணத்துவக் குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கல்வி அல்லது விசேட பயிற்சி பெறுவதற்காக 12 முதல் 22 வயது வரையிலான ஊனமுற்ற ஒவ்வொருவருக்கும் 4 இலட்சம் ரூபா ஒதுக்குவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தேர்தல் விஞ்ஞாபனத்தில் அறிவித்துள்ளார்.

இது தவிர கட்புல, செவிப்புலனற்றோர் மற்றும் உடற்குறைபாடுகளையுடைய சகல சிறுவர்களுக்கும் சகல வசதிகளுடன் கூடிய விசேட கல்விப் பிரிவுகள் மூன்றை புதிதாக ஆரம்பிக்கவும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

இதனூடாக அங்கவீனமுற்றவர்களுக்கு சிறந்த கல்வியை வழங்கவும் வளமான எதிர்காலத்தை ஏற்படுத்த முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் அங்கவீனமுற்றவர்களில் 50 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதிய முறையை மாற்றவும் அங்கவீனமுற்றவர்களுக்கு இலகுவான முறையில் பொதுப் போக்குவரத்துச் சேவைகளைப் பயன்படுத்த புதிய முறைமை ஒன்றை அமைப்பதாகவும் ஜனாதிபதி அறிவித்துள்ளார்.

இதுவும் மிகவும் வரவேற்கத்தக்க நடவடிக்கை எனவும் இதனூடாக அவர்கள் பல நன்மைகளைப் பெறுவர் எனவும் அவர் தெரிவித்தார். (2)

---

### சண்டே லீடர்

## பத்திரிகை காரியாலயத்தில் பொலிசார் திடீர் தேடுதல்

(கொழும்பு)

சண்டே லீடர் பத்திரிகைக் காரியாலயத்தில் பொலிஸார் திடீர் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ரத்மலானையில் அமைந்துள்ள குறித்த சண்டே லீடர் காரியாலய வளாகத்திற்குள் ஆயுதம் தரித்த பொலிஸார் தேடுதல் நடத்தியதாக குறிப்பிடப்படுகிறது.

பஸ் ஒன்றில் சென்ற பொலிஸாரே தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

அவதூறு ஏற்படும் வகையிலான சுவரொட்டிகள் அச்சிடப்பட்டுள்ளதாக வெளியான தகவல்களை அடுத்து தேடுதல் நடத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சண்டே லீடர் அச்சகப் பகுதியில் தீவிர தேடுதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் ஆசிரிய பீடப் பகுதியில் தேடுதல் நடத்தப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த அச்சகப் பகுதியை பொலிஸார் வீடியோப் பதிவு செய்து கொண்டுள்ளனர். தமது பத்திரிகை காரியாலயத்தில் தேடுதல் நடத்தப்பட்டதாகப் பத்திரிகையின் சிரேஸ்ட ஆசிரியர் பெட்ரிக்கா ஜேன்ஸ் உறுதிப்படுத்தியுள்ளார். (ச-5)

---

## டெங்கு தேர்தல் நடவடிக்கை மீளாய்வுக் கூட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை மற்றும் யாழ். மாவட்ட செயலகம் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த ஏற்பாட்டில் தற்போது யாழ். மாவட்டத்தில் வேகமாக பரவிவரும் டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பான இரண்டாவது மீளாய்வுக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் பிரதேச செயலாளர்கள், உதவி அரசாங்க அதிபர்கள், சகல திணைக்கள தலைவர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள், உள்ளூராட்சி மன்ற செயலாளர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் ஆகிய சகலரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் அர சாங்க அதிபர் ஆகியோர் கேட்டுள்ளார்கள். (ச)

தூக்கி எறியும் குதிரையைவிட சுமந்து செல்லும் கழுதை மேலானது.

—அமர்லாந்து

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# தேர்தல் பிரசாரங்களில் மூட்டப்படும் இனவாதத் தீ

தேர்தலில் வெற்றிபெறுவதற்காக பலதரப்பட்ட யுக்திகளை கையாளும் முறைமை அரசியலில் சர்வ சாதாரணமானது. அபிவிருத்தித்திட்டங்களின் முன்மொழிவுகள், சம்பள உயர்வுகள், வரிச்சலுகைகள் என்பன இவற்றில் முதன்மையானவை.

ஆனால் இலங்கையில் நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலில் அடிப்படை மனித உரிமைகளை வழங்குவது கூட தேர்தல் வாக்குறுதிகளாக அமைந்து விடுகின்றன.

பேரினவாத ஆட்சியில் சிறுபான்மை இனம் அடக்கப்படுவதே இத்தகைய வாக்குறுதிகள் வழங்கப்படுவதற்கு அடிப்படைக் காரணமாகும்.

இருந்ததை பறித்தெடுத்து மீளவும் தருவது கூட, தேர்தலில் வாக்குத் திரட்டும் நோக்கமாயின் இலங்கையின் இன ஒற்றுமை எந்தளவில் உள்ளதென்பதை ஊகிப்பதற்கு வேறு ஆதாரங்கள் தேவையிரா. அதிலும் இனவாதம் பேசி வாக்குத் தேடும் அநியாயம் அரங்கேறுவது கொடுமையிலும் கொடுமை.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவை பெறுவதில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும், ஜெனரல் சரத் பொன்சேகாவும் அதி தீவிரம் காட்டினர்.

இறுதியில் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவளிப்பதென்ற முடிபை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்தது.

இந்த முடிபை எடுப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பட்டபாடு தனி அத்தியாயமாக எழுதப்பட வேண்டியது.

எனவே அதனை பற்றி இவ்விடத்தில் விபரியாமல் விடுவது சாலச் சிறப்புடையது. எனினும் ஜெனரல் சரத் பொன்சேகாவை ஜனாதிபதித் தேர்தலில் ஆதரிப்பதென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முடிவு கூட, பத்துக்கு எட்டு என்ற நிலையிலேயே எடுக்கப்பட்டதாகும்.

இந்த முடிபை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுப்பதற்கு முன்னதாக அந்த கூட்டமைப்பின் கூட்டு கட்சிகள் தனிக்கட்சிகளாகவும், தனித் தனி உறுப்பினர்களாகவும் பிரிந்து நின்று ஜனாதிபதித் தேர்தல் பற்றிய முடிபுகளை அறிவித்தனர்.

தமிழ் மக்களின் நலன் தொடர்பில் எவ்வித அக்கறையும் கொள்ளாமல், தங்களின் சுயலாப தேடலுடன் அல்லது யாருக்கேனும் மறைமுகமாகக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்காக இவர்கள் இப்படி முடிபெடுத்தார்கள் என தமிழ் மக்கள் பேசும் அளவிற்கு அவர்களின் முடிபுகள் அமைந்தன.

அவர்கள் எடுத்த முடிபுக்காக வருந்த வேண் டிய காலம் விரைவில் உண்டென்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

ஏனெனில் தமிழ்மக்கள் தங்கள் கருத்துக் களை வெளிப்படையாகக் கூறி ஆபத்துக்களை சம்பாதிக்க மறுப்பவர்களே அன்றி அவர்கள் அரசியலிலோ அன்றி தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் நாடிகளை பிடித்து அறிவதிலோ ஆற்றல் குறைந்தவர்கள் அல்ல.

எனவே அவர்கள் தங்கள் வாக்குகளை சரியான இடத்தில் பிரயோகிப்பார்கள் என்பது நிறுத்திட்டமான உண்மை.

இருந்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கும் இடையில் உடன்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தமிழர்களுக்கு அதிகமான உரிமைகளை வழங்கிவிடும் எனத் தென்பகுதியில் செய்யப்படும் விசமத்தனமான பிரசாரம்,

சிங்கள மக்களையும், தமிழ் மக்களையும் பிரித்தாளும் நோக்குடையதுடன் இத்தகைய வர்கள் எதிர்காலத்திலும் இனவாதத் தீயை மூட்டி விட்டு வேடிக்கை பார்க்கபின் நிற்கமாட்டார்கள் என்பதையும் உறுதிப்படுத்துகின்றது.

எதுவாயினும் தமிழ், சிங்கள மக்கள் இலங்கையின் எதிர்கால ஒற்றுமை பற்றி சிந்திப்பதே நாட்டின் எதிர்கால அமைதிக்கு ஆரோக்கியமானதாக அமையும்.

# இன்று கங்கணசூரிய கிரகணம் கடைப்பிடிக்க வேண்டியவை எவை?

(கொழும்பு)

இன்று சூரிய கிரகணம் நிகழ்கிறது. இதையொட்டி தர்ப்பணம் செய்பவர்கள் மூன்று முறையும், மற்றவர்கள் இரண்டு முறையும் குளிக்கவேண்டும். இன்று உத்தராடம் நட்சத்திரத்தில் சூரிய கிரகணம் நிகழ்கிறது. ராகு பகவான், சூரியனை விழுங்குகிறார். காலை 11.24 மணிக்கு கிரகணம் துவங்குவதால் காலையில் வழக்கம் போல் குளித்து விட வேண்டும்.

காலை முதலே சாப்பிடுவதைத் தவிக்க வேண்டும். மதியம் 1.29 மணிக்கு கிரகணம் உச்ச நிலை அடைகிறது.

கிரகணம் விட்டதும் மாலை 3.16 மணிக்கு சூரியனை வணங்க வேண்டும். பின்னர் மீண்டும் நீராடி விட்டு சூடான ஆகாரம் சாப்பிடவேண்டும். கிரகணதோஷம் என்பது குறிப்பிட்ட சில நட்சத்திரத்தினருக்கு ஆறு மாதங்கள் வரை இருக்கும். குறிப்பாக வெள்ளிக்கிழமை பிறந்தவர்கள், கார்த்திகை, உத்தரம், உத்தராடம், திருவோணம், அவிட்டம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு இந்த தோஷம் உண்டு.

இவர்கள் தங்கள் உடல்நிலை மற்றும் மனநிலை நன்றாக இருக்க தங்கள் இஷ்ட தெய்வங்களின் கோவில்களில் தங்கள் பெயர் நட்சத்திரம் சொல்லி அர்ச்சனை செய்து கொள்ள வேண்டும். பிரதமை சிரார்த்தத்தை மறுநாள் செய்ய வேண்டும். இந்த கிரகணம் மாட்டுப் பொங்கலன்று ஏற்படுவதால் பசு, காளைகளுக்கு நோய் ஏற்படலாம்.

மேலும் துறவிகளுக்கும் வைத்தியம் செய்பவர்களுக்கும் மீனவர்களுக்கும் கடல்வாழ் உயிரினங்களுக்கும் பிரச்சினை உண்டாகுமெனவும் சொல்லப்பட்டுள்ளது.

கிரகணத்தன்று கடலில் குளிப்பது மிகவும் சிறந்தது. ஏனெனில் இந்த நாட்களில் கடலில் நிலையும் நமது உடல் நிலையும் மாற்றமடையும். அநேக நோய்கள் குணமாகும். மன ஒருமைப்பாடு உண்டாகும். நல்ல பசி ஏற்படும். இந்தத் தகவல்கள் சில பஞ்சாங்கங்களில் கூறப்பட்டுள்ளன. (2.6)

# வளர்ச்சி கண்டுள்ள யாழ் வர்த்தக நடவடிக்கைகள்

## யாழ் வணிக வளாக தலைவர்

(யாழ்ப்பாணம்)

ஏ-9 பாதை இருபத்துநான்கு மணித்தியாலமும் திறக்கப்பட்டமையையடுத்து யாழ்ப்பாணத்தில் வர்த்தக நடவடிக்கைகள் பாரிய வளர்ச்சி கண்டுள்ளதாக வணிக வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கமைய கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையிலான வர்த்தக நடவடிக்கைகள் சுமுகமடைந்ததைத் தொடர்ந்து யாழில் பொருட்களின் விலைகள் வெகுவாகக் குறைந்துள்ளன.

பால்மா உள்ளிட்ட முக்கிய பொருட்கள் கொழும்பை விடக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளதென்று யாழ். வணிக வளாகத்தின் தலைவர் ஜனத்குமார் தெரிவித்தார்.

யாழ். வர்த்தகர்கள் பொருட்களை மொத்தமாக நேரடியாகப் பணம் செலுத்திக் கொள்வனவு செய்வதால் வர்த்தக நிறுவனங்கள் கூடுதலாகக் கழிவினை வழங்குகின்றன. இதனால் வர்த்தகர்கள் குறைந்த விலையில் பொருட்களை விற்பனை செய்கிறார்கள் என்று தெரிவித்த ஜனத்குமார் கொழும்பில் விற்பனையாகும் பொருட்கள் யாழில் நடைபாதை வர்த்தகர்களிடமும் தாராளமாகக் கிடைப்பதாகக் கூறினார்.

இதேவேளை தனியார் வங்கிக் கிளைகள் திறக்கப்பட்டுள்ளதோடு நிதி நிறுவனங்களும் கிளைகளை ஆரம்பித்துள்ளன. புதிய புதிய வர்த்தக நிறுவனங்களும் பணிகளை ஆரம்பித்துள்ளன.

இந்நிலையில் யாழ்ப்பாண நகரில் வர்த்தக நடவடிக்கைகள் களைகட்டியுள்ளதோடு சனநடமாட்டம் அதிகரித்துள்ளது. தைப்பொங்கல் கொள்வனவுக்காக மக்கள் இரவிரவாக நகரங்களில் கூடியிருந்தமையை காணக்கூடியதாக இருந்ததென்றும் அவர் கூறியுள்ளார். (2-6)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

# ஆகமம் என்பது என்ன?

"எண்ணில் கோடி ஆகமம்" என்று வில்லிபுத்தூரர் சொல்கிறார். கோயில்களில் செய்யப்படும் பூசை முறைகள் ஆகமம் எனப்படும்.

சிவபெருமான் தெட்சிணாமூர்த்தி என்னும் குரு வடிவில் இருந்து, முருகனுக்கும், பார்வதி தேவிக்கும், சனத்குமாரர்கள் என்ற சீடர்களுக்கும், நந்திதேவருக்கும் இந்த ஆகமங்களைப் போதித்தார். கோடிக்கணக்கில் சொல்லப்பட்ட இந்த ஆகமங்களைச் சுருக்கி 28 ஆகப் பிரித்தனர். காமிகம், காரணம், வாதுளம் என 28 ஆகமங்கள் தற்போது வழக்கத்தில் உள்ளன.

# வெள்ளி நற்சிந்தனை

# பக்தியின் மொழி தமிழ் 106

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்

பழவினைகளால் இப்பிறப்பில் எல்லையற்ற துன்பத்தை அனுபவிக்க நேரிடும் என்ற நம்பிக்கை சைவ சமயத்தவரிடையே இன்று நிலவுகிறது. இந்தப் பழவினையென்பது முற்பிறப்புகளில் செய்யப்பட்ட வினையென்றும் கருதப்படுகிறது. நாயன்மார் பலர் இப்பழவினை பற்றிப் பல பாடல்களிலே குறிப்பிட்டுள்ளனர். இவ்வினை முன்னைவினை என்றும் அழைக்கப்பட்டது. முன்னைவினையை ஒழிக்கத் தெய்வ வழிபாடே அருமருந்தாகும். இறைவன் திருநாமத்தை இடைவிடாது சொல்வதும் திருத்தலங்களுக்குச் சென்று இறைவனை வணங்குவதும் இறைவழிபாட்டில் முக்கியம் பெற்ற செயற்பாடுகளாகும்.

சுந்தரர் வாழ்வியலில் பழவினை என்னும் விடயம் சென்ற பிறப்பில் செய்த வினையாகக் குறிப்பிடப்படவில்லை. இப்பிறப்பிலேயே முதலில் செய்த தீவினையும் "முன்னைநோய் " என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வினை என்பது செயற்பாடாகும். தீய செயற்பாடுகள் நோய் போல எம்மை வந்து தாக்கும். அதிலும் தெரிந்து செய்யும் செயற்பாடுகள் நோய் போலப் பீடித்துத் துன்பதைத் தரவல்லன. இந்த நோயின் பிடியிலிருந்து விடுபடும் வழியைச் சுந்தரர் கண்டறிந்தார். திருத்தலங்களுக்குச் சென்று இறைவனை வழிபடுவதன் மூலம் நோய் தீரும் என்பதை அனுபவம் மூலம் அறிந்தவர். கண் இழந்து மீண்டும் கண்பெற, வழிபாடே அவருக்குப் பெரிதும் உதவியது.

பெண்ணாசையால் கண்ணிழந்தவர் சுந்தரர். கண்ணை இழப்பது என்பது ஒரு கொடுமையான நோயாகும். அதிலும் இடையிலே கண் பார்வையை இழந்தால் அந்தத் துன்பம் தாங்க முடியாதது. அந்த இழப்பையே இறைவழிபாட்டால் நீக்கிய சுந்தரர் பாடலில் அந்த நம்பிக்கை வெகு ஆழமாகவே பதிவு செய்யப்பட்டுள்ளது. திருக்கொச்சைவயம் தலத்தை வழிபடச் சென்றபோது அவருக்கு தான் அனுபவித்த முன்னைநோய் நினைவுக்கு வருகிறது.

கோட்டாற்றைக் கண்களால் கண்டபோது அது நினைவுக்கு வருகிறது. பொன்னும் மாமணிகளையும் சேர்த்து கரையெங்கும் நுரைபரவ ஓடிவரும் ஆற்றிலே பெண்கள் நீராடிக்கொண்டிருக்கின்றனர். "கன்னிமார் முலை நலங்கவர வந்தேறும் கோட்டாறு " என்ற அவருடைய பாடலடி அவர் மன நிலை யைத் துல்லியமாக வெளிப்படுத்தி நிற்கும் நிலையைக் காண முடிகிறது. இளமையின் உந்தலால் தவறு செய்த அவருக்குத் தன் முன்னைநோய் நினைவில் வந்து நிறைகிறது. உடனே இறைவியோடு உடனுறையும் இறைவன் கோலத்தை நினைந்து பாடுகிறார். கொச்சைவயம் திருத்தலத்திலே மேவிய இறைவனை அவன் அருள் செய்யும் நிலையை எல்லோர் நெஞ்சிலும் பதிய வைக்க எண்ணுகிறார். 'முன்னைய நோய் இனிமே தொடராது ' என்று நெஞ்சத்திற்கு நம்பிக்கையூட்டுகிறார். வழிபாடு தன்னைத்தானே சீர்மியம் செய்யும் ஆற்றலைத் தரும். இனிமேல் அஞ்சவேண்டியதில்லை என நெஞ்சத்தை ஆறுதல் படுத்துகிறார். இறையருளை இளமையிலே உணரும் சுந்தரரது மன உறுதி உலகத்து வாழ் இளைஞர்களையெல்லாம் வழிப்படுத்தும் சீர்மியப் பணியாக உள்ளது. செய்த பிழையை மீண்டும் செய்யக் கூடுமோ என அஞ்சும் இளமையை நல்வழிப்படுத்தும் சுந்தரரது பணி தனித்துவமானது. செல்வச்சிறப்பும் இளமையின் எழுச்சியும் தவறிழைக்கத் தூண்டக்கூடும். எனவே முன்னேற்பாடாக நெஞ்சத்தை நல்வழிப்படுத்துவதே நலம்தரும்.

"பொன்னும் மணியும் கொழித்து எறி புனற்கரைகள்
வாய் நுரைகள் உந்தி
கன்னிமார் முலைநலங்கவர வந்தேறு கோட்டாறு சூழ
மன்னினார் மாதொடும் மருவிடம் கொச்சையே மருவி நாளும்
முன்னைநோய் தொடருமாறில்லைக் காண்நெஞ் சமே
அஞ்சல் நீயே "

# 200 ஆண்டுகளில் மிக மோசமான பூமியதிர்ச்சி; ஹெயிட்டியில் ஆயிரக்கணக்கானோர் பலி

ஹெயிட்டியின் தலைநகர் போர்டி ஆயுத பிரின்ஸை செவ்வாய்க்கிழமை இரவு தாக்கிய 7.0 ரிச்டர் பூமியதிர்ச்சியில் ஆயிரக்கணக்கானோர் பலியாகியிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

கடந்த இரு நூற்றாண்டுகளில் ஹெயிட்டி எதிர்கொண்ட மிக மோசமான பூமியதிர்ச்சியாக இது கருதப்படுகிறது.

இப்பூமியதிர்ச்சியில் அந்நாட்டிலுள்ள ஐக்கிய நாடுகள் தலைமையக கட்டிடம், ஜனாதிபதி மாளிகை உள்ளடங்கலாக ஆயிரக்கணக்கான கட்டிடங்கள் சேதமடைந்துள்ளன.

ஜனாதிபதி மாளிகை இடிந்து விழுந்த போதும் ஜனாதிபதி ரேன் பிரேவலும் அவரது மனைவியும் உயிர் தப்பியுள்ளதாக ஹெயிட்டியின் அமெரிக்காவுக்கான தூதுவர் ரேமண்ட ஜோசப் தெரிவித்தார்.

இந்த பூமியதிர்ச்சியைத் தொடர்ந்து பெருந்தொகையான ஐக்கிய நாடுகள் சபை உத்தியோகத்தர்கள் காணாமற்போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பூமியதிர்ச்சியின் பின் மேற்படி நகரப் பிராந்தியத்திலுள்ள பலரைக் காணவில்லை என முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவர்களில் பலர் இடிபாடுகளிடையே சிக்கியிருக்கலாம் என அஞ்சப்படுவதாகவும் பிராந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ள ஹெயிட்டிக்குத் தேவையான உதவிகளை வழங்குவதற்கு அமெரிக்கா, பிரித்தானியா மற்றும் வெனிசுலா ஆகிய நாடுகள் அணி



திரண்டுள்ளன.

போர்ட் ஆயு பிரின்ஸின் தென் மேற்கே சுமார் பத்து கிலோ மீற்றர் தொலைவில் தாக்கிய இந்த பூமியதிர்ச்சியைத் தொடர்ந்து 15 முதல் 20 நிமிடங்கள் வரையான இடைவேளையில் முறையே 5.9 ரிச்டர் மற்றும் 5.5. ரிச்டர் அளவான இரு பூமியதிர்ச்சிச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

ஹெயிட்டியின் வீதிகளில் பெரும்பாலானவை குறுகியவை என்பதால் கட்டிட இடிபாடுகள் காரணமாக போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் நீர் மற்றும் மின்சார விநியோகத்திலும் தடை ஏற்பட்டுள்ளது.

கட்டிட இடிபாடுகளிடையே எத்தனை பேர் சிக்கியுள்ளனர் என்பதை அனுமானிக்க முடியாதுள்ளதாக ஹெயிட்டியிலுள்ள ஐக்கிய நாடுகள் சமாதானப் படைத் தலைவர் அலெயின் லீ ரோய் தெரிவித்தார்.

இந்த பூமியதிர்ச்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகம் பான் கீ மூன் அனுதாபத்தைத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா ஹெயிட்டி மக்களுக்காக பிரார்த்திப்பதாக தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (2-6)

## தொலைக்காட்சி பார்க்கும் ஒவ்வொரு மணி நேரமும் மரணத்தை விரைவுபடுத்துகிறது

### ஆய்வாளர்கள் தகவல்

(சிட்னி)

தினமும் தொலைக்காட்சி முன் உட்கார்ந்து கொண்டு 4 மணி நேரத்துக்கு மேல் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்த்தால் விரைவில் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

அவுஸ்திரேலியா நாட்டில் விக்டோரியா மாநிலத்திலுள்ள பேக்கர் இருதய மற்றும் நீரிழிவு நோய்க்கான நிறுவனத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் நடத்திய ஆராய்ச்சியில் 8800 பேரின் வாழ்க்கை முறை குறித்து ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. இதில் தினமும் தொலைக்காட்சி முன் உட்கார்ந்து நிகழ்ச்சிகளைப் பார்ப்பவர்களுக்கு மரண அபாயம் அதி விரைவில் ஏற்படுகிறது என்பது தெரிய வந்தது. தொலைக்காட்சி முன் உட்கார்ந்து இருக்கும் ஒவ்வொரு மணி நேரமும் மரணத்தை விரைவுபடுத்துகிறது என்றும் அந்த ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர்.

இதன் மூலம் தினமும் 4 மணி நேரத்துக்கு மேலாக தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பவர்களுக்கு மரண அபாய வாய்ப்பு 46 சதவீதம் அதிகம் ஆகும் என்றும் இந்த ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். (2-6)

# எதிரி நாட்டு ஏவுகணையை வழிமறித்து தாக்கும் ஏவுகணை

(பீஜிங்)

எதிரி நாட்டு ஏவுகணையை நடுவழியில் மறித்து தாக்கி அழிக்கும் ஏவுகணையைச் சீனா தயாரித்துள்ளது. இந்த ஏவுகணையைச் சீனா வெற்றிகரமாகச் சோதனை நடத்தியது.

தரையிலிருந்து இந்தப் பாதுகாப்பு ஏவுகணை ஏவப்படும். இந்த சோதனை பற்றி அதிக விபரங்களை அது வெளியிடவில்லை. ஏதாவது ஏவுகணை இந்த சோதனையின்போது அழிக்கப்பட்டதா என்பது பற்றியும் தெரிவிக்கவில்லை.

ஆனால் எதிர்பார்த்த நோக்கத்தை இந்தச் சோதனை எட்டிவிட்டதாக சீன அரசு தெரிவித்துள்ளது. எதிர்பார்த்த நோக்கம் என்ன என்பதை அது தெரிவிக்கவில்லை. இந்தச் சோதனை பாதுகாப்பு நோக்கத்துடன் தான் நடத்தப்பட்டது. எந்தவொரு நாட்டையும் குறிவைத்து இது நடத்தப்படவில்லை என்றும் அது தெரிவித்துள்ளது. (2-6)

# ஊசியிலையை ஒத்த உருக்கள் செவ்வாய்க் கிரகத்தில்?



செவ்வாய்க்கிரகம் தொடர்பான ஆய்வில் ஈடுபட்டுள்ள நாசாவின் விண்கலமானது செவ்வாயின் மேற்பரப்பில் மரங்கள் போன்ற உருக்கள் காணப்படுவதைப் புகைப்படம் பிடித்து பூமிக்கு அனுப்பிவைத்துள்ளது. செவ்வாய்க் கிரகத்தின் குன்றுப் பகுதியொன்றில் எடுக்கப்பட்ட புகைப்படத்திலேயே ஊசியிலை மரங்களை ஒத்த இருண்ட உருக்கள் நிரையாக உள்ளமை காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி கிரகத்தின் வட துருவத்திலிருந்து 240 மைல்களுக்கும் குறைவான தூரத்தில் உறைந்த காபனீரொட்சைட் அல்லது உலர் பனிப்படிவைக் கொண்ட நிலப் பகுதியிலேயே இந்த மர உருக்கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

செவ்வாயில் இளவேனிற் காலத்தின்போது பனி உருகியதால் இடம்பெற்ற நிலச் சரிவுப் பகுதிகளிலேயே இந்த மர உருக்கள் தோன்றியுள்ளதாகக் கூறப்படுகிறது. இந்தப் புகைப்படமானது செவ்வாய்க் கிரகத்தைச் சுற்றி வலம் வரும் 'ஹரைஸ்' விண்கலத்தில் பொருத்தப்பட்ட அதி சக்தி வாய்ந்த புகைப்படக் கருவி மூலம் எடுக்கப்பட்டதாகும். (2-6)

# அல்கொய்தாவின் சிரேஸ்ட தலைவர் மோதலில் கொல்லப்பட்டுள்ளார்

## யேமன் பாதுகாப்புத் தரப்பு

அல்கொய்தா அமைப்பின் சிரேஸ்ட தலைவர் கொல்லப்பட்டுள்ளதாக அந்நாட்டுப் பாதுகாப்புத் தரப்பினர் தகவல் வெளியிட்டுள்ளனர்.

பாதுகாப்புப் படையினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையில் நடைபெற்ற துப்பாக்கிச் சமரின்போது குறித்த தலைவர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஷபாவா மாநிலத்தின் தலைவரான அப்துல்லாஹ் மஹாதர் என்பவரே இவ்வாறு கொல்லப்பட்டுள்ளதாகவும் மேலும் நான்கு அல்கொய்தா முக்கியஸ்தர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

மஹாதர் அல்கொய்தா இயக்கத்தின் சிரேஸ்ட தலைவர்களில் ஒருவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறெனினும் மஹாதர் அல்கொய்தா அமைப்பின் முக்கிய உறுப்பினர் அல்ல எனவும் கைது செய்யப்பட்டவர்கள் அல்கொய்தா இயக்க உறுப்பினர்கள் அல்ல எனவும் உள்நாட்டு தீவிரவாதத் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை அல்கொய்தா இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என யேமன் வெளிவிவகார அமைச்சர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார். இதேவேளை யேமன் உள்நாட்டுப் பிரச்சினைக்கு அமெரிக்கத் துருப்பினர் அனுப்பிவைக்கப்படமாட்டார்கள் என அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.




# உலகில் மிக உயரமான விமான நிலையம்

(பீஜிங்)

சீனாவின் ஆக்கிரமிப்புப் பகுதியான திபெத்தில் பாம்டா என்ற இடத்தில் ஏற்கனவே ஒரு விமான நிலையமுள்ளது. இது 4 ஆயிரத்து 436 மீற்றர் உயரம் கொண்டது.

இதுதான் உலகிலேயே மிக உயரமான விமான நிலையம் என பெயர் பெற்றது. இந்த நிலையில் திபெத்தில் மேலும் ஒரு விமான நிலையத்தைக் கட்ட சீனா முடிவு செய்துள்ளது.

இது ஏற்கனவே உள்ள விமான நிலையத்தைவிட 102 மீற்றர் கூடுதல் உயரமாகக் கட்டப்படவுள்ளது. அதாவது சுமார் 4 ஆயிரத்து 500 மீற்றர் உயரத்துக்குக் குறையாமல் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

தற்போது நாக்கூ என்ற இடத்தில் கட்டப்படவுள்ள இந்த விமான நிலையம் உலகிலேயே மிக உயரமான விமான நிலையம் என்ற பெயரை பெறுகிறது. உலகின் கூரை என்று அதற்குப் பெயரிடப்படவுள்ளது.

ரூ.ஆயிரத்து 300 கோடி செலவில் இந்த விமான நிலையம் கட்டப்படுகிறது. இதன் கட்டுமானப் பணி அடுத்த ஆண்டு தொடங்கும். திபெத்தின் மக்கள் தொகை 4 இலட்சமாகும். இந்த விமான நிலையம் திபெத்தின் மையப் பகுதியில் அமையவுள்ளது.

இதன் அருகே குயின்காய்-திபெத் ரயில் நிலையம் உள்ளது. இதன் மூலம் இப்பகுதியில் வர்த்தக மையம் ஏற்படுத்த சீனா திட்டமிட்டுள்ளது. இந்தத் தகவலை சீனாவின் ஷிகுவா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இப்பகுதியில் ரயில் நிலையம் மற்றும் விமான நிலையம் தொடங்குவதன் மூலம் திபெத்தின் ஆட்சி அதிகாரத்தைத் தொடர்ந்து தனது கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ளும் நோக்கில் சீனா இவற்றைக் கட்டுவதாகவும் கூறப்படுகிறது.







தென்னிலங்கையில் இருந்து யாழ். நாகவிகாரைக்கு வரும் சுற்றுலா பயணிகளுக்கு உதவும் வகையில் சுமார் ஒரு இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் செலான் வங்கியின் யாழ்.கிளையினரால் வழங்கப்பட்டது. நிகழ்வில் கலந்து கொண்ட தென்னிலங்கை சுற்றுலா பயணிகள் மற்றும் வங்கி ஊழியர்களையும் இதில் செலான் வங்கியின் வடபிராந்திய உதவி பொது முகாமையாளர் பி.நிரஞ்சன் அப் பொருட்களை யாழ். நாகவிகாராதிபதியிடம் ஒப்படைப்பதையும் படங்களில் காணலாம்.

# ஒருநாள் போட்டிகளில் விறுவிறுப்பை அதிகரித்துள்ள பந்துவீச்சு, துடுப்பாட்ட பவர் பிளே நடைமுறைகள்

**பவர் பிளே அதிரடி!**

ஒருநாள்போட்டிகளில் விறுவிறுப்பை அதிகரிக்க, சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) கொண்டுவந்த அதிரடி மாற்றங்களில் ஒன்று தான் பவர்பிளே. இந்த மாற்றத்தால் ஒருநாள் போட்டிகளில் மக்களுக்கு ஆர்வம் அதிகரிக்க ஆரம்பித்தது.

துடுப்பாட்ட பவர் பிளே (Bating Power play) ஓவர்களில் அதிவிரைவாக ஓட்டங்கள் சேர்க்கும் போது போட்டியின் நிலைமை தலை கீழாக மாறிவிடுகிறது. இந்த பவர் பிளே குறித்து பார்ப்போம்.

ஆரம்ப காலத்தில் ஒருநாள் போட்டிகளில் விக்கெட் காப்பாளர் உட்பட அனைத்து வீரர்களையும் களத்தடுப்பு செய்ய எல்லைக் கோட்டுக்கு அருகே கூட நிறுத்தலாம்.

இதனால் துடுப்பாட்ட வீரர்கள் ஓட்டங்கள் குவிப்பது சிரமமாகிவிடும். இந்நிலையில் போட்டிகளில் விறுவிறுப்பை அதிகரிக்க நினைத்த சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) களத்தடுப்பில் சில கட்டுப்பாடுகளை கொண்டு வந்தது அதாவது முதல் 15 ஓவர்களில் 9 களத்தடுப்பாளர்கள் ஆடுகளத்தை சுற்றியுள்ள 27 மீற்றர் தூர வட்டத்திற்குள்தான் நிற்க வேண்டும். 2 களத்தடுப்பாளர்கள் இந்த வட்டத்திற்கு வெளியே நிற்கலாம். இதன் மூலம் துடுப்பாட்ட வீரர்கள் அதிக பவுண்டரிகள் சிக்ஸர்கள் அடிக்க முடியும்.

**ஜெயசூரியா எழுச்சி**

முதன்முதலாக 1996இல் நடந்த உலகக் கோப்பைத் தொடரில் இந்த களத்தடுப்புக் கட்டுப்பாடுகள் அறிமுகம் செய்யப்பட்டது. இதை சரியாக பயன்படுத்திய இலங்கை அணியின் ஆரம்ப அதிரடி ஆட்டக்காரர்கள் ஜெயசூரியா, கலுவிதாரன இருவரும் (முதல் 15 ஓவர்) அதிரடியாக ஓட்டங்கள் குவித்து ரசிகர்களை மகிழ்வித்தனர்.

தவிர இந்த அதிரடிதான் அவர்களுக்கு உலகக்கோப்பை (1996) பெற்றுத்தந்ததென்றால் மிகையல்ல.

**பவர் பிளே விதிகள்**

தொடர்ந்து இது ரசிகர்களிடம் எதிர்பார்ப்பை அதிகரிக்க மேலும் சில மாற்றங்களை ஐ.சி.சி. கொண்டு வந்தது. இதன் படி பவர்பிளே விதிகள்கொண்டுவரப்பட்டன. இது பவர் பிளே-1 (முதல் 10 ஓவர்கள் கட்டாயம்) பவர் பிளே-2 (5 ஓவர்கள்) பவர் பிளே-3 (5 ஓவர்கள்) என அழைக்கப்பட்டது.

**தேர்வு முறை**

களத்தடுப்பு செய்யும் அணியின் தலைவர் போட்டியின் தன்மைக்கு ஏற்ப இந்த இரண்டு, மூன்றாவது பவர் பிளேயை தேர்வு செய்து கொள்ளலாம். அப்போது 3 களத்தடுப்பாளர்கள் உள்வட்டத்துக்கு வெளியே நிற்க வேண்டும்.

இந்த விதிமுறை கடந்த 2005 ஜுலை 7 இல் அவுஸ்திரேலியா-இங்கிலாந்து அணிகள் இடையிலான போட்டியில் அறிமுகம் செய்யப்பட்டது.

**துடுப்பாட்ட பவர் பிளே**

பின்னர் இதிலும் மாற்றம் செய்யப்பட்டது. அதாவது மூன்றாவது பவர் பிளேயை தேர்வு செய்யும் உரிமை துடுப்பாட்ட அணிக்கு கொடுக்கப்பட்டது. இது பட்டிங் பவர் பிளே என்று அழைக்கப்பட்டது.

கடந்த 2008இல் நடந்த நியூசிலாந்து-பங்களாதேஷ் அணிகள் பங்கேற்ற ஒருநாள் தொடரில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இப்போது வரை இது தான் நடைமுறையில் இருந்து வருகிறது.

**மந்த நிலை**

இதனால் ஒருநாள் போட்டியில் முதல் 15 ஓவர்கள் மற்றும் துடுப்பாட்ட பவர் பிளேயின் போது விறுவிறுப்பு அதிகமாக உள்ளது. இடையில் 20 முதல் 40 வரையிலான ஓவர்களில் மந்த நிலை காணப்படுகிறது. இதையடுத்து இதிலும் மாற்றம் கொண்டுவர ஐ.சி.சி. முடிபு செய்துள்ளதாக தெரிகிறது.

**தற்போதைய முறை**

தற்போது முதல் 10 ஓவர்கள் கட்டாய பவர் பிளே முடிந்த் பின்னர் உடனடியாக களத்தடுப்பு அணியில் இருந்து இரண்டாவது பவர் பிளே பயன்படுத்துகிறார்கள். துடுப்பாட்ட அணியினர் கடைசி 10 ஓவர்களில் தான் பெரும்பாலும் பவர் பிளேயை பயன் படுத்துகின்றனர்.

**ஐ.சி.சி. செய்யவிரும்பும் மாற்றம்**

❖ முதல் பவர் பிளே முடிந்த பின் அடுத்த பவர்பிளே எடுப்பதில் கட்டாய நிலை கொண்டு வரப்படும். அதாவது, குறிப்பிட்ட ஓவர்கள் இடைவெளியில்தான் பவர் பிளே எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் களத்தடுப்பு செய்யும் அணியினருக்கு ஏற்படும்.

❖ வழக்கமாக கடைசி 10 ஓவர்களில் எந்த அணியுமே அடித்து விளையாடுவதால் போட்டியில் விறுவிறுப்பு இருக்கும். இதனால் இந்த ஓவர்களில் துடுப்பாட்ட அணியில் இருந்து பவர் பிளே எடுப்பதற்கு கட்டுப்பாடு கொண்டு வரப்படும்.

❖ அநேகமாக களத்தடுப்பு, துடுப்பாட்ட பவர் பிளேக்கள் 20 முதல் 40 ஓவர்கள் இடைவெளியில் பயன்படுத்த வேணடியிருக்கும். இந்த மாற்றங்கள் விரைவில் நடை முறைக்கு வரலாம் எனத் தெரிகிறது.

**இருபது-20 இல் அறிமுகம்**

சமீபத்தில் பெரும் வரவேற்பை பெற்றுள்ள இருபது-20 போட்டிகளில் இந்த முறை நடைமுறையில் உள்ளது. இதில் முதல் ஆறு ஓவர்கள் கட்டாய பவர் பிளே உண்டு. அவ்வளவு தான், மற்றபடி களத்தடுப்பு, துடுப்பாட்ட பவர் பிளே இல்லை.

இது தவிர உலகளவில் கிரிக்கெட் ரசிகர்களை கட்டிப்போடும் இந்தியாவின் ஐ.பி.எல். தொடரிலும் பவர் பிளே நடைமுறையில் உள்ளது.

# சதம் அடித்தனர் பொன்டிங், கிளார்க்; அவுஸ்திரேலிய அணி வலுவான ஆரம்பம்



(ஹோபார்ட்)

பொன்டிங்-கிளார்க் ஜோடியின் பிரிக்கப்படாத இணைப்பாட்டத்தின் மூலம் அவுஸ்திரேலிய அணி முதல்நாள் ஆட்ட நேர முடிவில் அதன் முதன் இன்னிங்ஸில் 3 விக்கெட்டுக்களையிழந்து 302 ஓட்டங்களை எடுத்தது.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி 3 டெஸ்ட், 5 ஒரு நாள் போட்டிகள் மற்றும் ஒரே ஒரு இருபது-20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதல் இரண்டு டெஸ்ட் போட்டியில் வெற்றிபெற்ற அவுஸ்திரேலிய அணி தொடரை 2:0 என்ற கணக்கில் தனதாக்கியது.

இந் நிலையில் மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் நேற்று ஹோபார்டில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி பொன்டிங்-மைக்கெல் கிளார்க் ஜோடியின் பிரிக்கப்படாத இணைப்பாட்டின் மூலம் நேற்றைய முதல் நாள் ஆட்ட நேர முடிவில் அதன் முதல் நாள் இனிங்ஸில் 3 விக்கெட்டுக்களையிழந்து 302 ஓட்டங்களை எடுத்தது.

இதில் 39 ஆவது சதத்தினை பூர்த்தி செய்த அணித்தலைவர் ரிக்கி பொன்டிங் 137 ஓட்டங்களையும் மைக்கெல் கிளார்க் 111 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.



பந்துவீச்சில் மொகமெட் ஆசிப், மொகமெட் அமீர் மற்றும் உமர் குல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

# ஸ்ரையன், மோர்கல் வேகத்தில் இங்கிலாந்து அணி சுருண்டது

(ஜோகனஸ்பேர்க்)

ஸ்ரையன், மோர்கலின் துல்லியமான பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் இங்கிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 180 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.

இத் தொடரில் முதல் மூன்று போட்டிகளில் ஒன்றில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது. இந் நிலையில் தீர்க்கமானதும் நான்காவதும் இறுதியுமான டெஸ்ட் நேற்று ஜோகனஸ் பேர்க்கில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 180 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இதில் கொலின்வூட் 47 ஓட்டங்களையும் பெல் 35 ஓட்டங்களையும் சுவான் 27, குக் 21 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் ஸ்ரையன் 13.5 ஓவர்கள் பந்து வீசி ஒரு ஓட்டமற்ற ஓவர் உட்பட 51 ஓட் டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும் மோர்கல் 3 விக்கெட்டுக்களையும் மைக்லாரன், கலிஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங் சில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி நேற்றைய முதல் நாள் ஆட்ட நேர முடிவில் விக்கெட் இழப்பின்றி 29 ஓட்டங்களை எடுத்தது.



இதில் பிறின்ஸ் 15, அணித்தலைவர் சிமித் 12 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்தனர் மழை இடைஇடையே குறுக்கிட்டதால் நேற்றைய முதல் நாள் ஆட்டம் 60 ஓவர்கள் வீசப்பட்ட நிலையில் நிறுத் தப்பட்டது. போட்டியின் இரண்டாம் நாள் இன்றாகும்.

## வன்முறைச் சம்பவம் மூவர் சந்தேகத்தில் கைது

(பொலநறுவை)

பொலநறுவை கதிரவலை 28ஆம் கட்டைப் பகுதியில் அரசியல் ஆதரவாளர்கள் இரு தரப்பினரிடையே நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல் தொடர்பில் மூன்று சந்தேகநபர்களை பொலிஸார் கைது செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவம் தொடர்பாக மேலும் 9சந்தேக நபர்களை அடையாளம் காணப்பட்டுள்ளதாக வடமத்திய மாகாணத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜெயந்தகமகே குறிப்பிட்டார்.

சந்தேக நபர்களைக் கைது செய்வதற்காக விஷேட பொலிஸ் குழுவொன்றை நியமித்துள்ளதாக அவர் கூறினார்.

இதேவேளை இச் சம்பவத்தில் 3வாகனங்களுக்கும் கட்டடம் ஒன்றுக்குமாக சுமார் 10லட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

அந்தப் பகுதியின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக 5பொலிஸ் குழுக்கள் ஈடுபட்டுள்ளதாகவும் சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர் ஜெயந்தகமகே குறிப்பிட்டுள்ளார். (ச-3)

## இலங்கை...

த்தின் போது கனரக ஆயு தப் பயன்பாடு ரத்துச் செய்யப்பட்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பில் தமது கட்சி உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் மேலதிக தகவல்களை எதிர்பார்ப்பதாகவும் பாரதீய ஜனதாக் கட்சியின் அமைப்பாளர் சிறி நலீன் எஸ் கோலி தெரிவித்துள்ளார்.

இந்திய உள்நாட்டு அரசியல் விவகாரங்களை வெளிநாட்டுச் சக்திகள் தீர்மானித்ததாக வெளியான செய்திகள் சற்று ஆச்சரியத்தை ஏற்படுத்துவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான விடயங்களை ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் இந்த விவகாரங்கள் உண்மையென்றால் தமது கட்சி கேள்வி எழுப்பும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-5)

## ஜனாதிபதி மகிந்தவின் ...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியா முழுவதுமாக நாடாளுமன்றத்தில் 220 இடங்களைப் பெற்ற காங்கிரஸ் கட்சிக்கு வேறு யாரும் உதவியோ அல்லது வெளிநாட்டுக்காரர்களின் உதவியோ தேவைப்படாது. நாம் நாடிச் செல்ல போவதுமில்லை என்று கூறினார்.

நாம் இலங்கை அரசுடன் தொடர்பு கொண்டு போரை நிறுத்துமாறு பல முறை கூறியிருந்தோம். ஆனால்இலங்கை அரசு அதனைக் கருத்தில் எடுப்பதாகத் தெரியவில்லை.

அத்துடன் தமிழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மத்திய அரசின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சார்பாகவும் போரை நிறுத்துமாறும் கோரிக்கை விடப்பட்டது.

கனரக ஆயுதங்களைப் பயன்படுத்த வேண்டாம் என்றும் இந்தியா கோரியது. ஏன் என்றால் அது பொதுமக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும்.

என்பதற்காகத்தான் தேர்தலில் காங்கிரஸ் கட்சி வெற்றி பெறுவதற்காகக் கனரக ஆயுதப் பாவனையை நிறுத்துமாறு நாம் கோரவில்லை. இலங்கை ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்கவின் கூற்றை ஏற்றுக் கொள்ள முடியாததுடன் அது தவறானது என்றும் கூறினார். (ச-5)

## ஜாதிக...

கொழும்பு மாவட்ட அமைப்பாளர் மற்றும் உடஹாமுல்லே ஸ்ரீ விமலதேரர் உள்ளிட்ட ஆறு பௌத்த பிக்குகள் பொன்சேகாவுக்கு ஆதரவளிக்கத் தீர்மானித்துள்ளனர்.

மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்கு ஜெனரல் சரத் பொன்சேகா காத்திரமான தீர்வுத் திட்டங்களை முன்வைத்துள்ளதாக பௌத்த பிக்குகள் தெரிவித்துள்ளனர்.(ச-5)

## நோர்வேயின் முதன்மை...

தோறும் சுயாதீனமாக ஓர் அமைப்பு தெரிவு செய்து வருகின்றது.

16 வயதுக்கு மேல் நோர்வே நாட்டுக்குப் புலம்பெயர்ந்து, மற்றைய வெளிநாட்டவர்களுக்கு முன்னுதாரணமாகத் திகழும் தலைமைத்துவப் பண்புகளைக் கொண்ட வெளிநாட்டவர்களையே இவ் அமைப்பு தெரிவு செய்து வருகின்றது.

இவ் வகையில் நோர்வே பேகன் பல்கலைக்கழகப் பொறியியற்றுறையில் பேராசிரியராகக் கடமை புரியும் வேலாயுதபிள்ளை தயாளனை இவ் அமைப்பு 10 முதன்மையான வெளிநாட்டவர்களில் ஒருவராகத் தெரிவு செய்துள்ளது.

பேராசிரியர் தயாளன் அவர்கள் 1984 ஆம் ஆண்டிலிருந்து நோர்வேயில் வசித்து வருபவர். தான் பிறந்த மண்ணையும் மக்களையும் நேசிக்கும் ஒருவரான இவர் பேகனில் தமிழ் மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் பெரும் அக்கறையோடு செயற்பட்டு வருவதோடு பேகன் அன்னைபூபதி தமிழ் கலைக்கூடத்தில் அதிபராகவும் சேவையாற்றி வருகின்றார். (ச)

## ஜனாதிபதி...

அவர் கூறினார்.

நாட்டு மக்களின் வறுமை நிலையைப் போக்கும் நோக்குடனேயே தான் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட விரும்பியதாகவும் அதனை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நிறைவேற்றுவதாகத் தனக்கு வாக்குறுதியளித்ததனாலேயே தான் இவ்வாறான இவ் முடிபினை மேற்கொண்டதாகவும் கூறினார்.

ஜனவரி 26 ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தலில் எனக்கு வாக்களிக்க முடிபு செய்தவர்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களிக்குமாறும் கூறுகின்றேன் என்றார்.(ச-5)

## கண்ணிவெடிகள் அகற்றப்...

குறிப்பு வருமாறு,

கடந்த 10 ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் யாழ்.விஜயத்தின் போது உயர் பாதுகாப்பு வலயத்தில் மீள்குடியேற்றம் பற்றிய அவரது ஆலோசனையின் பெயரிலும் யாழ்.பிராந்திய பாதுகாப்பு வலய உயர் அதிகாரி மேஜர் மகிந்த ஹத்துருசிங்கவின் பிரதான ஆலோசனையின் பெயரிலும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி ஆகியோரின் அறிவுறுத்தல்களின் பிரகாரமும் எந்தெந்த இடங்களில் மக்களைக் குடியமர்த்தலாம் என்று ஆராயப்பட்டது.

அதன் பின் கடந்த 12 ஆம் திகதி அமைச்சர், ஆளுநர் மற்றும் இராணுவ அதிகாரிகள் ஆகியோர் மீள்குடியேற்றவுள்ள மக்களுடன் சென்று இடங்களைப் பார்வையிட்டனர்.

மீள்குடியேற இருக்கும் மக்களின் விருப்புக்கேற்பவும் பாதுகாப்புடனும் அமர தேவையான வகையில் கண்ணிவெடிக்ள் அகற்றப்பட்டு வருகின்றது.

குறித்த வேலைகள் நிறைவு பெற்றதும் அவர்கள் தங்கள் தங்கள் இடங்களில் குடியமர்த்தப்படுவார்கள் என யாழ்.பிராந்தியப் பாதுகாப்பு அதிகாரி மேஜர் ஜெனரல் மகிந்த ஹத்துருசிங்கவினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் அதுவரை மீளக்குடியேறும் பிரதேசங்களில் அமைந்துள்ள கோவில், தேவாலயங்களுக்குப் பூசகர்கள், மக்கள் சென்று வழிபடுவதற்கு ஏற்ற ஒழுங்குகள் தடையின்றி மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் அறியத் தரப்பட்டுள்ளது. (ச)

## வன்முறைச் சம்பவங்க...

அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் வன்முறைகள் உக்கிரமடைந்துள்ளன. கடந்த சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். இது நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளது.

எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளரின் ஆதரவாளர்கள் சென்ற பேருந்துகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் முன்னர் இலங்கையில் நடைபெற்ற தாக்குதல்களைப் போல நன்கு திட்டமிடப்பட்டவை.

நாட்டில் நடைபெறும் வன்முறைகளைத் தவிர்ப்பதற்கு ஜனாதிபதி முயற்சிகளை மேற்கொள்ளாது வெறும் கண்டனங்களை வெளியிடுவது போதுமானதல்ல.

நாட்டின் பாதுகாப்புக்கும் அமைதிக்கும் அவரே பொறுப்பு. ஜனாதிபதியினாலும் அவரின் நெருங்கிய ஆதரவாளர்களினாலும் தேர்தல் விதிமுறைகள் மீறப்படுவதுடன் அரச சொத்துக்களும் தேர்தல் பிரசாரங்களுக்குத் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்படுகின்றன.

நேர்மையான தேர்தல் ஒன்று நடைபெறுவதற்கான பாதுகாப்புக்களை வழங்கும் பொறுப்பிலிருந்து பொலிஸ் மா அதிபர் விலகியுள்ளார்.

தற்போது நடைபெற்று வரும் வன்முறைகளுக்கு அவரின் பொறுப்பற்ற தன்மைதான் காரணம். இலங்கையில் மோசமடைந்துள்ள தேர்தல் வன்முறைகளை நிறுத்துவதற்கு அனைத்துலக சமூகமும் அரசும் உடனடியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## டப்ளின் விசாரணைகளை...

தன்மைக்குப் பாரிய அச்சுறுத்தல் ஏற்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல்கள் நடைபெறவுள்ள நிலையில் இவ்வாறான விசாரணைகள் நடத்தப்படுகின்றமை ஏற்றுக் கொள்ள முடியாதென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

விசாரணைகள் நடத்தப்படும் காலத்தை உன்னிப்பாக அவதானித்தால் இதன் பின்னணியில் இருக்கும் அரசியல் நோக்கம் புலப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசாரணைக் குழுவின் நடவடிக்கைகள் பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது. தெரிவு செய்யப்பட்ட சில நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த விசாரணைக் குழு செயற்பட்டு வருவதாகவும் இதில் நியாயத்தை எதிர்பார்க்க முடியாது எனவும் அரசாங்கம் அறிவித்துள்ளது. (ச-5)

## தமிழ்...

கொண்டு வந்தனர். இந் நிலையில் அரசியல் கைதிகளின் விடுதலை விடயத்திற்கு இரண்டு மாதங்களுக்கு முடிபை எட்ட வேண்டும் என ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ நீதி அமைச்சர் மிலிந்த மொறகொடவுக்கு விடுத்த பணிப்புரையை அடுத்தே இந்தப் போராட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் இந்த முடிபை மன்னார் ஆயர் வணக்கத்துக்குரிய ஜோசப் இராயப்பு நேற்று அரசியல் கைதிகளுக்கு நேரடியாக அறிவித்துள்ளார். (ச-5)


### மரண அறிவித்தல்

### திருமதி சிதம்பரப்பிள்ளை இலட்சுமி

கரவெட்டி மத்தியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிதம்பரப்பிள்ளை இலட்சுமி அவர்கள் நேற்று (14-01-2010) வியாழக்கிழமை சிவபதமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளையின் (சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை-நெல்லியடி ஸ்தாபகர்) அன்பு மனைவியும், கந்தசாமி (ஜெயராம் களஞ்சியம்-யாழ்ப்பாணம்) புனிதவதி (ராணி),சிவம் (சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை-நெல்லியடி), திலகவதி, சரஸ்வதி, சுப்பிரமணியம் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கந்தசாமி (பான் ஏசியா), ஜெயராணி, சிவஞானம் (ஞானலக்சுமி ஸ்ரோர்ஸ்-நெல்லியடி),ரஞ்சநாதன், செல்வமகாலக்சுமி (பொறுப்பதிகாரி-உப பிரதேசசபை உடுப்பிட்டி),பானு(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும்,

பகீரதன்,பகித்திரா,சாரங்கன், அனுசன், நீரஜா, அஜந்தா, Dr.சங்கீதா (வவுனியா பொது வைத்தியசாலை),அனுராகன் அபிராமன், சங்கீர்த்தன், மணிமாறன்,துவாரகன், துளசி, காயத்திரி (பருத்தித்துறை பெண்கள் உ.த. பாடசாலை), ஜனகன், நிரோஜன், ஜீவிதா, கிசோர்,அருண் ,பிரியா (லண்டன்), கேதீஸ்வரன் (HNB முகாமையாளர்-வவுனியா), காண்டீபன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 15/01/2010 வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சோனப்பு இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அம்பம் ஆஸ்பத்திரி அருகாமை,
கரவெட்டி.

தகவல்:-
சி.கந்தசாமி
(மகன்)
சி.சிவம்
(மகன்)

(C-4235)



**Mega scholarship**

நீங்கள் மக்கள் மத்தியில் தனித்துவம் பெறுவதற்கு உங்களை நிதித்துறையில் பயிற்சி பெற்ற வணிகத்தலைவராக உயர்த்தும். CIMA

New Batch: Diploma in Management Accounting / CIMA Certificate in Business Accounting

Pre-requisite entry requirements
CIMA Certificate Level,
Degree in Business or Accounting

அனைவரும் பயிலலாம்

MCS — Supported By UNDP/JRRP
324, பலாலி வீதி,
பரமேஸ்வராசந்தி அருகில்
யாழ்ப்பாணம்,



### தொடர் கருத்தரங்கு

இடம் :- நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம், நல்லூர்.
காலம் :- இன்று தொடக்கம் பிரதி வெள்ளிக்கிழமை தோறும்
நேரம் :- மாலை 4.00 மணி
விடயம் :- "நாவலர் காட்டிய சைவவாழ்வியல்"
(சைவ வினாவிடையை அடிப்படையாகக் கொண்டது)
உரையாற்றுபவர் :- சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம்
(முதுகலைமாணி சைவசித்தாந்தம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
சு.பரமநாதன்
செயலாளர், இந்து அமைப்புக்களின் ஒன்றியம்


## ஜனாதிபதி மகிந்தவின் ...

இது தொடர்பில் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க மேலும் கூறியதாவது,

இலங்கையில் இறுதி யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது பல தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டுக் கொண்டிருந்தனர். அப்போது இந்தியாவில் பொதுத் தேர்தலும் நடைபெற்றது.

இந் நிலையில் போரை நிறுத்தி தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதை நிறுத்துவதற்கு இந்திய ஆளும் காங்கிரஸ் கட்சி நடவடிக்கை எடுக்கத் தவறும் பட்சத்தில் தமிழக மக்கள் தமது கட் சிக்கு வாக்களிக்க மாட்டார்கள் என அக் கட்சி எண்ணியது.

இதனையடுத்து விடுதலைப்புலிகளுடனான இறுதிப் போரை உடனடியாக நிறுத்துமாறு இந்தியாவிலிருந்து ஜனாதிபதி மகிந்தவுக்கு கோரிக்கை விடப்பட்டது.

அதனை ஜனாதிபதி அடியோடு மறுத்து விட்டார். அப்படியாயின் காங்கிரஸ் வெற்றி பெற விடுதலைப்புலிகளுடன் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போர் தொடர்பில் தான் வேறு என்ன செய்ய வேண்டும் என அவர் இந்தியாவிடம் கேட்டுள்ளார்.

அதற்கு கனரக ஆயுதங்களின் பாவனையாவது நிறுத்த வேண்டும் என இந்தியா கோர, அது ஏற்கனவே நிறுத்தப்பட்டு விட்டது என ஜனாதிபதி பதிலளித்துள்ளார்.

இவ் அறிவித்தல் மூலம் பொதுத் தேர்தலில் இந்தியக் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்று மீண்டும்ஒருமுறைஆட்சிஅமைத்துள்ளது என லலித் வீரதுங்க கூறியுள்ளார். (விரிவான செய்தி 10 பக்கத்தில் உள்ளது) (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 15.01.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.